இலங்கைத் திருச்சபைக்கு

# உருக்கொடுத்த உத்தமர்

## தூய யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும்



தமிழ் நேசன்

தூய யோசவ்வாஸ் ஆண்டு

The Year of St. Josephvaz 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைக்கு

# உருக்கொடுத்த உத்தமர்

## தூய யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும்


**தமிழ் நேசன்**

அருட்திரு. பாவிலு கிறிஸ்து நேசரெட்னம்

B.Ph (Rome), B Th (Rome), M.A. (Reading), M.Phil (Jaffna)



**வெளியீடு**

கலையருவி

சமூகத் தொடர்பு அருட்பணி மையம், மன்னார் மறைமாவட்டம்

(புனித யோசவ்வாஸ் ஆண்டு செயலாக்கக் குழு, மன்னார் மறைமாவட்டம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : இலங்கைத் திருச்சபைக்கு 'உருக்கொடுத்த உத்தமர்' (தூய யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும்)

ஆசிரியர் : அருட்திரு. தமிழ் நேசன்

உரிமை : ஆசிரியருக்கு

முதற் பதிப்பு : 2017 பெப்ரவரி

பக்கம் : viii + 36 = 44

வெளியீடு : கலையருவி

அச்சுப் பதிப்பு : ஸ்கை பிறின்டர்ஸ், மன்னார்

விலை : ரூபா 50/=

தொடர்பு : அருட்திரு தமிழ் நேசன் (இயக்குனர்)
கலையருவி, மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம், புனித சூசையப்பர் வீதி, பெற்றா, மன்னார். தொலைபேசி : 077 7420811, 023 2250789

மின்னஞ்சல் : nesanmnr@gmail.com

Title : Ilankai Thiruchabaiku Urukodutha Uththamar (The Life and Ministry of St. Joseph Vaz)

Author : Rev. Fr. Thamil Nesan

Editon : 2017 Fubraury

Pages : viii + 36 = 44

Publication : KALAIYARUVI

Printing : Sky Printers, Mannar

Price : Rs. 50/=

ISBN : 978 - 955-7351 - 00-1

**அச்சேற்ற அனுமதி :**


அருட்திரு ஏ. விக்ரர் சோசை,

குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் காணிக்கை



இந்நூல் மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு அன்புக் காணிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## யோசவ்வாஸ் அடிகளின் கையெழுத்து

அம்பிட்டியா கண்டி, தேசிய குருத்துவக் கல்லூரியிலுள்ள டி. எல். ஜி. பெரேரா அவர்கள் வரைந்த ஓவியத்தின் பிரதி.

(நன்றி – 2017 STORIES OF SAINT JOSEPH VAZ
By Fr. Romualdo Robin Rodrigues)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை 2017ஆம் ஆண்டை 'புனித யோசவ்வாஸ் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் மிகவும் உன்னதமானது. இன்றைய திருச்சபை பின்பற்றவேண்டிய பல செய்திகளைக் கொண்டது.

இந்நிலையில் புனித யோசவ்வாஸ் அடிகளாரைப்பற்றி இந்நாட்டில் உள்ள தமிழ் கத்தோலிக்க மக்களும் ஏனையவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் அவருடைய வாழ்வையும் பணிகளையும் உள்ளடக்கிய ஒரு நூல் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சாதாரணமாக எல்லா மக்களும் வாங்கி வாசிக்கும் வகையில் சிறிய நூலாகவும், குறைந்த விலையிலும் இந்நூல் வெளிவருவது பாராட்டத்தக்கது.

இந்நூலை எழுதிய அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தில் 'கலையருவி' எனப்படும் சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனராகவும், 'மன்னா' என்ற மாதாந்தக் கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார். இதைவிட தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல் போன்ற துறைகளிலும் கணிசமான நல்ல பணிகளை ஆற்றிவருகின்றார்.

கலையருவியின் வெளியீடாகவும், புனித யோசவ்வாஸ் ஆண்டு செயலாக்கக் குழுவின் வெளியீடாகவும் வரும் இப்படைப்பை அனைவரும் வரவேற்பார்கள் என உறுதியாக நம்புகிறேன். இந்நூலை அனைவரும் வாங்கி வாசிக்கும்படியாகவும், பங்குத்தந்தையர், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலைத் தலைவர்கள் இந்நூலைத் தங்கள் பங்கு மற்றும் பணித்தளங்களில் பெற்று, மக்கள் வாங்கி வாசித்துப் பயனடைய ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நேசன் அடிகளார் இதுபோன்ற இன்னும் பல நல்ல படைப்புக்களை சமயத்திற்கும் மொழிக்கும் தரவேண்டுமென வாழ்த்தி எனது ஆசீரையும் வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

**ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,**
**அப்போஸ்தலிக்க பரிபாலகர்,**
**மன்னார் மறைமாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

யோசவ்வாஸ் அடிகளார் இலங்கையின் முதல் புனிதர். அவருடைய வாழ்வும் பணியும் அதிசயமானது; ஆச்சரியம் நிறைந்தது. இன்றைய திருச்சபைக்கு முன்னுதாரணமாகவும் மேல்வரிச் சட்டமாகவும் விளங்குகின்றது.

நான் சிறிய குருமட மாணவனாக இருந்த காலத்திலேயே அருட்தந்தை ம. பாவிலுப்பிள்ளை (அமதி) எழுதிய 'யோசவ்வாஸ் முனிவரின் சரிதை' என்ற நூலை வாசித்திருந்தேன். இந்நூல் 1980இல் வெளிவந்தது. அந்த நூலை வாசித்தபோதுதான் முதல் தடவையாக நான் யோசவ்வாஸ் அடிகளாரைப்பற்றி அறிந்துகொண்டேன்.

நான் இறையியல் கற்கும்போது 'ஆசியத் திருச்சபை வரலாறு' என்ற பாடத்திற்காக, "யோசவ்வாஸ் அடிகளின் மறைபரப்பு வழிமுறைகளும், இன்றைய திருச்சபைக்கு அதன் பொருத்தப்பாடும்" என்ற தலைப்பில் ஓர் ஆங்கிலக் கட்டுரை எழுதியிருந்தேன். பின்னர் 'த மெசஞ்சர்' (The Messenger) என்ற இலங்கை கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகையில் ஒரு முழுப்பக்கத்தில் அக்கட்டுரை வெளிவந்தது. நான் எழுதிய அந்த ஆங்கிலக் கட்டுரையின் சில பகுதிகள் பின்னர் 'ஓர்டோ' (Ordo) எனப்படும் திருவிழிபாட்டு நாட்குறிப்பேட்டில் யோசவ்வாஸ் திருவிழா பற்றிய பகுதியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எனது மாணவப்பருவத்தில் இருந்தே யோசவ்வாஸ் அடிகளின் வாழ்க்கை வரலாற்றை வாசிப்பதிலும் அறிவதிலும், எழுதுவதிலும் ஆர்வம் காட்டிவந்தேன். அந்த ஆர்வமும் ஈடுபாடும்தான் இப்படியானதொரு நூலை எழுதவேண்டும் என்ற உந்துதலை எனக்குக் கொடுத்தது.

இந்நூல் அளவில் சிறியதாக, அதேவேளையில் புனிதரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக உள்ளடக்கியதாக, குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதாக, இலகுவான மொழிநடையைக் கொண்டதாக அமையவேண்டும் எனக் கருதினேன். என்னுடைய சில குரு நண்பர்களும் தமது பங்கு மக்களுக்கு இப்படியான ஒரு நூல் வேண்டும் என்று என்னிடம் வலியுறுத்தியிருந்தனர்.

எனது இந்த நூலாக்க முயற்சிக்கு ஊக்கமளித்து, ஆசியுரை வழங்கிய மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கும், இந்நூலை அச்சேற்றுவதற்குரிய அனுமதியை அளித்து இந்நூல் பற்றிய குறிப்பையும் வழங்கி உதவிய குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாருக்கும் மனமார்ந்த நன்றிகள். இந்நூலைக் கணனிப் பதிப்புச் செய்தும், செவ்வை பார்த்தும் உதவிய எனது அலுவலகப் பணியாளர்கள் செல்வி சர்மிலா, செல்வி துளக்சினி ஆகியோருக்கும், இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த மன்னார் ஸ்கை பிறின்ரர்ஸ் நிறுவனத்திற்கும் எனது அன்பான நன்றிகள்.

புனித யோசவ்வாஸின் பரிந்துரை உங்கள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக!

**அன்புடன் - அருட்திரு. தமிழ் நேசன்,**
**இயக்குனர் - கலையருவி, ஆசிரியர் - மன்னா பத்திரிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | இல |
|---|---|---|
| சமர்ப்பணம் | | iii |
| ஆசியுரை | | v |
| என்னுரை | | vi |
| முன்னுரை | | viii |
| இயல் 1. | ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை எதிர்கொண்ட துன்புறுத்தல்கள் | 01-04 |
| இயல் 2. | புனித யோசவ்வாஸ் அடிகளின் பிறப்பு, கல்வி, குருத்துவம் | 05-08 |
| இயல் 3. | இந்தியாவில் ஆரம்பகாலக் குருத்துவப் பணிகள் | 09-12 |
| இயல் 4. | ஒரற்ரோறியன் சபையை நிறுவுதலும் இலங்கை நோக்கிய பயணத்தின் ஆரம்பமும் | 13-15 |
| இயல் 5. | இலங்கையை அடைதலும் யாழ்ப்பாணத்தில் பணிபுரிதலும் | 16-20 |
| இயல் 6. | கண்டி இராச்சியத்தில் அடிகளாரின் பணி | 21-23 |
| இயல் 7. | இலங்கை முழுவதிலும் இடம்பெற்ற மறைப்பணி | 24-25 |
| இயல் 8. | அடிகளாரின் இறப்பும் புனிதர் பட்டமும் | 26-30 |
| பிற்சேர்க்கை – 1. | ஒரே பார்வையில் அடிகளாரின் வாழ்வும் பணியும் | 31-32 |
| பிற்சேர்க்கை – 2. | புனித யோசவ்வாஸ் பணியாற்றிய சில முக்கிய இடங்கள் (இலங்கை வரைபடத்தில்) | 33 |
| பிற்சேர்க்கை – 3. | புனித யோசவ்வாஸ் ஆண்டுக்கான செபம் | 34 |
| உசாத்துணை | | 35 |
| இந்நூலாசிரியரின் படைப்பு முயற்சிகள் | | 36 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஆசியாவின் மிக உன்னதமான மறைபரப்பாளராக புனித யோசவ்வாஸ் அடிகளார் கருதப்படுகின்றார். ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க சமயம் அடக்கி ஒடுக்கப்பட்டது; பலவிதமான துன்புறுத்தல்களை எதிர்கொண்டது. கத்தோலிக்க குருக்களுக்கு அடைக்கலம் கொடுப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது.

உயிர் அச்சுறுத்தல் நிறைந்த ஓர் இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் யோசவ்வாஸ் அடிகளார் இந்தியாவில் இருந்து வந்து இந்நாட்டிற்குள் காலடி பதித்தார். ஓர் யாசகன் (பிச்சைக்காரன்) வேடம்பூண்டு இரகசியமாக இந்நாட்டிற்குள் வந்தார். இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து, இறைமனிதனாக 10 வருடங்கள் தனி ஒரு குருவாகவும் 14 வருடங்கள் சில குருக்களின் உதவியோடும் இந்நாட்டின் நாலா திசைகளிலும் நாம் வியக்கத்தக்க அரும்பெரும் பணியாற்றினார்.

இலங்கையில் தூர்ந்து அழிந்துபோகும் நிலையில் இருந்த கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கட்டியெழுப்பினார். அணைந்துபோகும் தறுவாயில் இருந்த கத்தோலிக்க விசுவாச விளக்கைத் தூண்டிவிட்டுப் பிரகாசிக்கச் செய்தார். இலங்கையில் கத்தோலிக்கத்துக்கு புது இரத்தம் பாய்ச்சி, புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

அதனால்தான் அவர் 'இலங்கையின் அப்போஸ்தலர்" என்று அனைவராலும் அழைக்கப்படுகின்றார். "இலங்கைத் திருச்சபையைக் காத்த மாவீரன்" என்றும், "இலங்கைத் திருச்சபையின் காரண கர்த்தா" எனவும் அவர் திருச்சபை வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகின்றார். 'யோசவ்வாஸ் முனீந்திரர்' எனவும் 'சம்மனசுச் சுவாமி' எனவும் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார்.

வாஸ் அடிகளின் உயர்ந்த நற்பண்புகளும். போற்றுதற்குரிய அன்மீகக் குணநலன்களும் அவருடைய பணிவாழ்வின் வெற்றிக்கு முக்கிய காரணிகளாய் அமைந்தன. அவரிடத்தில் விளங்கிய ஆழ்ந்த அர்ப்பணிப்பு, இறைபராமரிப்பில் உறுதியான நம்பிக்கை, விவேகமான துணிவு, பணி ஆர்வம் போன்றவை வியப்புக்கும் ஆச்சரியத்துக்கும் உரியவை. இற்றைக்கு ஏறக்குறைய 300 வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் வாழ்ந்து பணியாற்றிய அடிகளாரின் வீரத்துவம் நிறைந்த வாழ்வும் பணியும் இன்றைய திருச்சபைக்கு முன்னுதாரணமாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 1

# ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை எதிர்கொண்ட துன்புறுத்தல்கள்

## 1. இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றல்

இலங்கையை முதன் முதலில் கைப்பற்றிய மேலைத்தேய ஆட்சியாளர்கள் போர்த்துக்கேயர் ஆவர். இவர்களைத் தொடர்ந்து இலங்கையைக் கைப்பற்றியவர்கள் ஒல்லாந்தர் ஆவர். இவர்களுக்கிடையில் 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வர்த்தகம் தொடர்பாகக் கீழைத்தேசங்களிற் பெரும்போட்டி நடைபெற்றது. அதன் விளைவாக ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளைக் கைப்பற்றியதுமல்லாமல், போர்த்துக்கேயர் ஆண்டுவந்த பிரதேசங்களையும் கைப்பற்ற முயன்றார்கள்.

1638இல் ஒல்லாந்தர் மட்டக்களப்பையும், 1639இல் திருகோணமலையையும் கைப்பற்றி அங்கு கோட்டைகளைக் கட்டினர். 1640இல் ஒல்லாந்தர் கொழும்புக் கோட்டையைத் தாக்கினர். அதைப்பிடிக்க முடியாமற் போனமையால், நீர்கொழும்பைத் தாக்கி, அதைத் தம்வசப்படுத்தி அங்கு ஒரு கோட்டையையும் கட்டினர். பின்பு காலித் துறைமுகமும் அவ்வாறே தாக்கப்பட்டு அவர்களாற் பிடிக்கப்பட்டது. அவ்வாறு ஒல்லாந்தர் நான்கு கோறளை, ஏழு கோறளை என்ற இடங்களையும் இலங்கையின் தெற்குப் பாகத்தையும் தமதாட்சிக்குட்படுத்தினர்.

ஆனால் போர்த்துக்கேயர் அதே ஆண்டில், ஒல்லாந்தருக்கெதிராக ஊக்கத்துடன் போர் தொடுத்து நீர்கொழும்பையும், நான்கு கோறளை, ஏழு கோறளை என்ற இடங்களையும் திருப்பிப் பிடித்தனர். 1644இல் ஒல்லாந்தர் நீர்கொழும்பை இரண்டாம்முறை கைப்பற்றினர். 1655இல் ஒல்லாந்தர் களுத்துறை, பாணந்துறை முதலிய இடங்களைக் கைப்பற்றினர். அத்றகுப்பின் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டனர். அவர்களை எதிர்த்து ஏறக்குறைய ஆறு மாதங்களுக்குப் போர் புரிந்தபின், கொழும்புக் கோட்டை 1656 வைகாசி மாதம் சரணடைந்தது. அதைத் தொடர்ந்து ஒல்லாந்தர் 1658 மாசி மாதம் மன்னாரையும், சித்திரை மாதம் ஊர்காவற்றுறையையும், யாழ்ப்பாணத்தையும் தம்வசப்படுத்தினர். இவ்வாறு போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் முடிவெய்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கத்தோலிக்கருக்கு எதிரான துன்புறுத்தல்கள்

ஒல்லாந்தர் கல்வின் மதத்தைச்சேர்ந்த கிறிஸ்தவர்களாவர். ஐரோப்பாவில் கல்வின் மதத்தினருக்கும், கத்தோலிக்கருக்குமிடையில் எதிர்ப்பு மனப்பான்மை இருந்து வந்தது. போர்த்துக்கேயர் மீண்டும் இலங்கையைத் தாக்கினால் இலங்கையிலிருந்த பெருந்தொகையான கத்தோலிக்க மக்கள் அவர்களுக்கு ஆதரவளிக்கக்கூடும் என்று ஒல்லாந்தர் பயந்தனர். எனவேதான் ஒல்லாந்தர் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையை இல்லாதொழிக்க திட்டம் தீட்டினர்.

இலங்கையில் சமயப்பணி ஆற்றிய குருக்கள் அனைவரும் போர்த்துக்கேயராக இருந்தமையினால் அவர்கள் போர்த்துக்கேயப் படையினரோடு வெளியேற்றப்பட்டனர். இரகசியமாகத் தங்கியிருந்த ஒருசில குருக்கள் தேடிப்பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் அல்லது கண்டி இராச்சியத்தில் புகலிடம் தேடினர். 'அந்நிய குருமார் இலங்கையில் பிரவேசிக்கக்கூடாது, குருமாருக்கு இரகசியமாகப் பாதுகாப்பளிப்பவர்கள் மரணதண்டனைக்கு உள்ளாவார்கள்' என்ற சட்டங்களை ஒல்லாந்தர் விதித்திருந்தனர். கத்தோலிக்க தேவாலயங்கள் அழிக்கப்பட்டன அல்லது பறிமுதல் செய்யப்பட்டன. அவைகளில் இருந்த சுரூபங்கள் உடைக்கப்பட்டன அல்லது தீக்கிரையாக்கப்பட்டன, கத்தோலிக்க பாடசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுப் புரட்டெஸ்தாந்து மதப் பாடசாலைகளாக்கப்பட்டன. இந்தப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பும்படி கத்தோலிக்கப் பெற்றோர் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

கல்வின் மத ஆலயங்களில் நடைபெற்ற இறை வழிபாட்டிற்குச் சமூகமளிக்கும்படி அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர். கத்தோலிக்க மக்கள் இரகசியமாகவோ வெளிப்படையாகவோ ஒன்றாகக்கூடி, வழிபாட்டு முயற்சிகளில் ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டது. இச்சட்டத்தை முதல் முறையும் இரண்டாம் முறையும் மீறுகின்றவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்றும் அச்சுறுத்தப்பட்டது. கல்வின்மத முறைப்படி நிறைவேற்றப்பட்ட திருமுழுக்கு மற்றும் திருமண அருட்சாதனங்கள் மட்டுமே ஒல்லாந்த அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன. பிரேத அடக்கம்கூடக் கல்வின்மத முறைப்படி செய்யப்பட வேண்டுமென்று கட்டளை விதிக்கப்பட்டது. ஒல்லாந்தர் தமது ஆட்சியதிகாரப் பணிகளிலும், படையிலும் உள்ளூர் மக்களை அதிகமாகப் பயன்படுத்தினர். அவர்களுக்கு உயர் பதவிகளையும்கூட வழங்கினர்.

ஆனால் கல்வின் மதத்தைத் தழுவிய கிறிஸ்தவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன. கல்வின் மதத்தைத் தழுவ மனமில்லாத கத்தோலிக்கருக்கு அரசாங்கப் பதவிகள் மறுக்கப்பட்டன. அத்துடன் அவர்கள் தெண்டம் செலுத்துதல் போன்ற வேறு நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் குடியேறியிருந்த போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் அதிகமாகத் துன்புறுத்தப்பட்டனர். அவர்களுடைய மொழி தடை செய்யப்பட்டது. அவர்களுடைய நடவடிக்கைகள் உளவாளிகளால் விசாரணை செய்யப்பட்டு அவர்கள்மேல் பொய்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இன்னும் பல்வேறுவிதமான துன்புறுத்தல்களை எதிர்கொண்டனர். ஆனால் அவர்கள் தங்கள் விசுவாசத்தைத் தளரவிடாமல் அதில் உறுதியாய் நின்றனர். சிறு கைத்தொழில்களைச் செய்து வாழ்க்கை நடத்தி வந்தனர்.

உள்ளூர்வாசிகளான கத்தோலிக்கரிலும் பெரும்பாலானோர் தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாக நின்று, கத்தோலிக்க வழிபாடுகளை கடைப்பிடித்து வந்தனர். இரவில் வீடுகளில் இரகசியமாகக்கூடிச் செபங்களைச் சொல்லி வந்தார்கள். ஒல்லாந்தரிடம் இருந்து பாதுகாத்த திருச்சுரூபங்களை வீடுகளில் இரகசியமாக வைத்து வணக்கம் செலுத்தி வந்தனர். தலைமைக்காரர் பிள்ளைகளுக்குக் கத்தோலிக்க முறைப்படி திருமுழுக்குக் கொடுத்துவந்தனர். ஞாயிறு வாரங்களில் விசுவாசிகள் இரகசியமாகக் கூடிய இடங்களில் பூசைத்தியானம், பிரார்த்தனை முதலிய செபங்களை வாசித்தனர். கத்தோலிக்கருடைய திருமணம், பிரேத அடக்கம் முதலிய சடங்குகளைக் கத்தோலிக்க முறைப்படி செய்வித்து வந்தனர். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு மறைக்கல்வியூட்டி வந்தனர்.

இவ்வாறு கரையோரப் பகுதிகளில் இருந்த கத்தோலிக்க மக்கள் தங்கள் விசுவாசத்தைப் பல இன்னல்கள் மத்தியில் பிரமாணிக்கமாய்ப் பாதுகாத்து வந்தனர். ஆனால், பலர் பதவி மோகத்தால் தூண்டப்பட்டு முதலியார், அதிகாரம் முதலிய உயர்பதவிகளைப் பெறும் நோக்கத்துடன் கத்தோலிக்க மதத்தை மறுதலித்து கல்வின் மதத்தைத் தழுவினர். புதிதாக மனந்திரும்பியவர்களின் விசுவாசம் ஆழமாக வேரூன்றி இருக்காதபடியால் அவர்கள் துன்பங்களுக்குப் பயந்து கத்தோலிக்க மதத்தைக் கைவிட்டு புத்த சமயத்தை அல்லது சைவ சமயத்தை மீண்டும் தழுவிக்கொண்டனர்.

### 3. கத்தோலிக்கருக்கு சிங்கள மன்னரின் பாதுகாப்பு

பல கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தர் செய்துவந்த கொடுமைகளைப் பொறுக்கமுடியாமல் தாங்கள் வாழ்ந்துவந்த இடங்களைவிட்டுப் பெயர்ந்து, அமைதியும் பாதுகாப்பும் உள்ள வேறு இடங்களைத் தேடிச்சென்றனர். இவ்வாறு மாந்தையிலிருந்த சில கத்தோலிக்கர் தாங்கள் வணங்கிவந்த அற்புதங்களைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த மாதா சுரூபத்தைத் தங்களோடு எடுத்துக்கொண்டு அடர்ந்த காடுகளால் சூழப்பட்டிருந்த இடமாகிய மடு என்னும் இடத்திற்குச் சென்று தங்கித் தங்கள் கத்தோலிக்க வாழ்க்கையை எவ்வித தொந்தரவுமின்றி வாழ்ந்து வந்தனர். இதுவே மடுமாதா திருப்பதியின் ஆரம்ப வரலாறாகும். சிங்கள மன்னனால் ஆண்டுவரப்பட்ட கண்டி இராச்சியத்தின்மேல் ஒல்லாந்தருக்கு எவ்வித ஆதிக்கமும் இல்லாதிருந்தமையால் இலங்கையில் குடியேறியிருந்த போத்துக்கேயரும் சுதேசிகளான (உள்ளூர்வாசிகளான) பல கத்தோலிக்கரும் ஒல்லாந்தரின் கொடுமைகளுக்குத் தப்பிக்கொள்ளும்பொருட்டு, கண்டி இராச்சியத்தின் பல்வேறு இடங்களில் புகுந்து ஆங்காங்கே குடியேறி வாழ்ந்தனர்.

கண்டி மன்னன் அங்கு குடியேறிய கத்தோலிக்கரைத் துன்புறுத்தாமல் விட்டுவிட்டதுமல்லாமல், அவனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் பகைமை இருந்து வந்தமையால், கத்தோலிக்கருக்குப் பாதுகாப்பும் அளித்துவந்தான். இவ்வாறு சீதாவாக்கை, ரூவன்வெல, கொண்டங்கமுவ, இரத்தினபுரி, வாகக்கோட்டை, கல்கமுவ முதலிய ஒல்லாந்தர் ஆட்சி செய்த பகுதிகளில் இருந்துவந்த கத்தோலிக்க மக்கள் கண்டி இராச்சியத்தில் குடியேறினர். இவ்விடங்களில் அவர்கள் எவ்வித தடையுமின்றித் தங்கள் மதத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.

கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாய் நின்ற மக்களுக்கு 30 ஆண்டுகளுக்குமேல் குருக்களின் உதவி இல்லாத நிலையில் அவர்கள் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாத நிலையில் இருந்தார்கள். காலம் செல்லச்செல்ல சிலருடைய விசுவாசமும் தளர்ச்சியடையத் தொடங்கியது. அக்காலத்தில் பிறந்த பிள்ளைகள் தகுந்த மறை அறிவைப் பெறாமலும், அருட்சாதனங்களின் தெய்வீக உதவியை அடையாமலும், பெயரளவில் மாத்திரம் கிறிஸ்தவர்களாக வளர்ந்து வந்தார்கள். விரைவில் கத்தோலிக்க மதம் பூண்டோடு அழிந்தொழிந்து போகுமென்று ஒல்லாந்தர் மனப்பால் குடித்துவந்தனர்.

ஆனால் கிறிஸ்து தமது திருச்சபையைக் கைவிடவில்லை. நெருப்பினால் பொன் புடமிடப்படுவதுபோல, ஒல்லாந்தரின் வேதகலாபனையினால் இலங்கைத் திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு, புதுமுறையில் மீளக் கட்டியெழுப்பப்பட்டு, புத்தொளிவிட்டுப் பிரகாசித்து வளர்ச்சியடைய வேண்டுமென்று அவர் விரும்பினார். இலங்கைத் திருச்சபையைப் பாதுகாத்து, மீளக்கட்டியெழுப்புவதற்கு தகுந்த ஓர் அப்போஸ்தலரைக் கிறிஸ்து அவ்வேளையில் ஆயத்தப்படுத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 2

## புனித யோசவ்வாஸ் அடிகளின் பிறப்பு, கல்வி, குருத்துவம்

### பிறப்பும் திருமுழுக்கும்

புனித யோசவ்வாஸ் இந்திய நாட்டின் கோவா மாநிலத்தில் உள்ள பெனாலிம் (Benaulim) என்னும் தனது தாயின் ஊரில் 1651ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை கிறிஸ்தோப்பர் வாஸ், தாய் மரிய டி மிராண்டா இருவரும் உயர்குலமான பிராமண வகுப்பைச் சார்ந்த கொங்கணி இந்தியர்.

கோவாவில் உள்ள கொங்கணிப் பிராமணர்கள் 16ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கர்களாக மாறினார்கள். போர்த்துக்கேயரின் சமய சமூகப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்வதில் கொண்டிருந்த ஆர்வத்தினால் தங்கள் இனம், குலம் ஆகியவற்றிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டார்கள். ஆயினும் அவர்கள் தங்கள் குடும்பப் பாரம்பரியத்தையும், கிராமத்தின் எளிமையான வாழ்க்கை முறையையும் பேணி வந்தார்கள். பொதுவாக கர்ப்பிணித் தாய்மார் பிரசவத்திற்காக தமது பெற்றோர் வீடு செல்வது அந்நாட்களில் அங்கு வழக்கமாக இருந்தது. இதனால் யோசவ்வாஸ் பெனாலிம் என்ற தனது தாயின் ஊரிலேயே பிறந்தார்.

பிறந்து எட்டாம் நாள் பங்கு ஆலயமான திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இயேசு சபைக் குருமுதல்வர் யசிந்தோ பெரேரா (Jacinto Pereira) என்பவரிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர்களின் வழக்கப்படி தந்தை வழியில் செபஸ்தியான் வாஸ் என்பவரும், தாய் வழியில் கோப் டி மிராண்டா என்பவரும் ஞானப்பெற்றோராக இவரைப் பொறுப்பேற்றனர்.

### குடும்பப் பின்னணி

கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் குடும்பமாக, ஏழ்மையான பண்புகளைக்கொண்ட குடும்பமாக இக்குடும்பம் விளங்கியது. இக்கிறிஸ்தவக் குடும்பம் பக்தியிலும், நேர்மையிலும், பிறர் அன்புச் சேவையிலும் சிறந்து விளங்கியது. இதனால் இக்குடும்பத்தைச் சூழ்ந்து வாழ்ந்த ஏனைய குடும்பங்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு பிராமணக் குடும்பமாக இருந்தாலும் 'வாஸ்' என்ற போர்த்துக்கேயக் கிறிஸ்தவப் பெயரைத் தனது குடும்பப் பெயராகக் கொண்டிருந்தது.

## தந்தை கிறிஸ்தோப்பர் வாஸ்

யோசவ்வாஸின் தந்தையான கிறிஸ்தோப்பர் வாஸ் (Christovao Vaz) சாதாரண வசதிகளைக்கொண்ட தனது பரம்பரை வீட்டிலே வாழ்ந்து வந்தார். விவசாயப் பரம்பரையிலே வந்த இவர் ஒரு விவசாயியாகவும், சிக்கனமானவராகவும், ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பவராகவும் விளங்கினார். சாதாரண வாழ்க்கைத் தரத்தில் உள்ள ஓர் இந்தியக் குடிமகன் அக்காலத்தில் பெறக்கூடியதாய் இருந்ததைவிட மேலான கல்வியறிவைப் பெற்றிருந்தார். தனது உயர்மட்ட ஆற்றல்களினாலும், நற்செயல்களினாலும் தனது கிராமத்தவர்களால் நன்கு அறியப்பட்டிருந்தார்.

கிறிஸ்தோப்பர் வாஸ் மராட்டி மொழியின் கிளை மொழியாகவும், பிராமணர்களின் தாய் மொழியாகவும் விளங்கிய கொங்கணி மொழியிலே தேர்ச்சி பெற்றிருந்தார். பாடசாலைக் கல்வியை போர்த்துக்கேய மொழியிலேயே கற்றார். அக்காலத்தில் போர்த்துக்கேய மொழி கோவா மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும், மக்களின் பேச்சு மொழியாகவும் விளங்கியது. அத்துடன் கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்தவ கலாசாரத்தையும் பரப்பும் ஊடகமாகவும் விளங்கியது.

## தாய் மரிய டி மிராண்டா

கிறிஸ்தோப்பர் வாஸின் மனைவியின் பெயர் மரிய டி மிராண்டா (Maria de Miranda) இவர் பெனாலிம் (Benaulim) என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பத்தைப் போலவே இவருடைய குடும்பமும் நற்பண்பும், கத்தோலிக்க மறையுணர்வும் கொண்டு விளங்கியது. அவர்களுக்கு பேத்ரோ என்ற ஓர் மகனும், அஞ்சலா என்ற ஓர் மகளும் இருந்தனர்.

இந்நிலையில்தான் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் ஓர் குழந்தையாக, இந்திய இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் தன் அடிச்சுவடுகளைப் பதிப்பவராக, தலைமுறைதோறும் நினைவுகூரப்படும் முன்னுதாரணமான குருவாக 'கீழைத்தேச விசுவாசத்தின் சிறந்த கொடையாக' வாஸ் குடும்பத்தின் ஆறு பிள்ளைகளில் மூன்றாவது பிள்ளையாக நமது புனிதர் யோசவ்வாஸ் பிறந்தார்.

## சிறுபராய வாழ்வு

யோசவ்வாஸ் பிறப்பதற்கு முன்பே இறைவன் ஒரு மனிதர் மூலம் யோசவ்வாஸின் மகிமையான பிற்கால வாழ்க்கை பற்றி தந்தையான கிறிஸ்தோப்பர் வாசிற்கு அறிவித்ததாக மக்கள் கூறுவதுண்டு. அவர் தனது குடும்பம் தொடர்பான விடயங்களைக் குறித்துவைக்கும் நாளேட்டில் இருந்து பின்வரும் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்டது, "1651ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி எனக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பிறந்த 8ஆம் நாள் திருமுழுக்கு அளிக்கப்பட்டு யோசவ்வாஸ் என்னும் பெயர் சூட்டப்பட்டது. காலப்போக்கில் அவன் உயர் நிலையடைவான்"

யோசவ்வாஸ் பிறந்த இடம் கோவாவில் உள்ள அவருடைய தாயின் கிராமமாகிய பெனாலிம் என்ற கிராமம். அவர் வளர்ந்தது தந்தையின் சொந்த இடமான சண்கோல் **(Sancoale)** என்ற கிராமத்தில் அகும்.

யோசவ்வாஸ் சிறிய வயதில் இருந்தே இறை ஊக்கத்தில் வளர்வதற்கு அவரது குடும்பச்சூழல் காரணமாக அமைந்திருந்தது. கிறிஸ்தோப்பர் வாஸின் இரண்டு விதவைச் சகோதரிகள் அவர்களுடன் வாழ்ந்த காரணத்தினால் வழிபாடுகள், செபங்கள், செபமாலைத் தியானங்கள் என பக்திமுயற்சிகளில் பாலப்பருவத்திலிருந்தே ஈடுபட்டார். சிறிய வயதிலேயே கதவைச் சாத்திவிட்டு தியானம் செய்யும் அளவுக்கு ஊக்கம் பெற்றிருந்தார்.

## பாடசாலைக் கல்வி

யோசவ்வாஸின் ஆரம்பக் கல்வி சண்கோலில் இருந்த ஆரம்பப் பாடசாலையில் தொடங்கியது. தனது 5வது வயதில் அவர் ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். போர்த்துக்கேயத்தை அங்கு கற்றார். திறமையான மாணவனாக இருந்தது மட்டுமன்றி பிறருக்கு உதவுதல், செபித்தல் போன்ற உயர்ந்த பண்புகளால் பலராலும் பாராட்டப்பட்டார்.

இவரது சிறுபராயத்தில் அதீத பக்தியை அவதானித்த தந்தையார் இறைபணிக்கு அவரை அர்ப்பணிக்க நினைத்தார். அதற்காக பெனாலிம்மிலே உள்ள மேல்நிலைப்பள்ளியில் அவரைச் சேர்த்தார். அங்கும் தனது நற்பண்புகளால் பலராலும் கவரப்பட்டார். இங்கு இலத்தீன் மொழியைக் கற்றுத் தேர்ந்தார்.

15 வயதானவுடன், மேற்படிப்புக்காக கோவா நகரத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு இயேசுசபைக் குருக்கள் நடத்திய புனித சவேரியாரால் நிறுவப்பட்ட "புனித சின்னப்பர் கல்லூரியில்" சேர்க்கப்பட்டார். புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த ஆச்சிரமம் ஒன்றில் இருந்தவாறு கல்லூரிப் படிப்பினைத் தொடர்ந்தார். வரலாறு, இதிகாசம், இலக்கியம், தர்க்கம், நீதிநூல், சோதிடம், சங்கீதம் போன்ற பாடங்களை கற்றுத்தேறினார். அவர் தேர்ந்தெடுத்த பாடங்கள் அவரது இறை போதக வாழ்வுக்கு பின்னாளில் அவருக்கு உதவின எனலாம்.

## குருத்துவக் கல்வி

புனித சின்னப்பர் கல்லூரியில் இருந்து குருத்துவக் கல்விக்காக புனித தோமஸ் உயர் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். புனித சாமிநாதர் சபைக்குருக்கள் நடத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்லூரியில் ஆர்வத்துடன் தத்துவயியல், இறையியல் துறைகளைக் கற்று கல்வியைத் தொடர்ந்தார். செபமாலை மாதா ஆலயத்தில் இருந்த குருத்துவ விடுதியில் தங்கியே கல்வியைத் தொடர்ந்தார்.

இறைபக்தி அவரில் ஊற்றெடுத்துப் பாய்ந்தது. கல்வியில் சிறந்து விளங்கினார். அவரை பரீட்சித்த சாமிநாதர் சபைப் பண்டிதர், "யோசவ்வாஸ் அறிவு சாதூரியத்தில் மிகுந்த முதிர்ச்சி உள்ளவர்" என்று விசேட சான்று பகர்ந்துள்ளார். குருமடத்தில் இருந்த காலத்தில் செபதவங்களில் அதிக ஈடுபாடு காட்டினார். நற்கருணைக்குமுன் அதிக நேரத்தினை செலவிட்டு கோவிலிலேயே உறங்கியும் போய்விடுவாராம். அந்தளவுக்கு இறை உறவை அவர் வளர்த்துக்கொண்டார். பிற்பட்ட கால சவால் மிகுந்த வாழ்வுக்கு இறைவன் அவரை தயார்படுத்தினார்போலும்.

## குருத்துவ திருநிலைப்படுத்தல்

1671ஆம் ஆண்டு தனது 20வது வயதில் குருத்துவத்துக்கு முன் வழங்கப்படும் பட்டங்களைப் பெற்று திருச்சபையின் பணிகளுக்குத் தன்னை அர்ப்பணித்தார். 23வது வயதில் 1674இல் உபதொண்டர் அபிஷேகத்தினை பெற்றார். 1676ஆம் ஆண்டு யோசவ்வாஸ் தனது 25வது வயதில் அதிமேற்றாணியார் அன்ரோணியூ மிராண்டா **(Antonio Brandao)** அவர்களினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அவர் குருவானது கண்டு கிறிஸ்தோப்பர் வாஸின் குடும்பம் பேருவகை அடைந்தது. இறைபணியின் ஒரு பெருந்தூணாக, இலங்கைத் திருச்சபையைக் கட்டி எழுப்பப் போகின்ற மறைத்தூதுவனாக அவர் திருநிலைப்படுத்தப்படுகிறார் என்பதை அன்று யாரும் உணர்ந்திருக்க வாய்ப்பில்லை!

## இலங்கைக் கத்தோலிக்கரின் நிலையை அறிகின்றார்

இலங்கைக் கிறிஸ்தவர்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின்கீழ் அனுபவித்துவந்த பல இன்னல்களையும், அவர்களது பரிதாப நிலையையும் சீனாவுக்குச் சென்று திரும்பவும் வழியில் நேராகக் கண்டறிந்த ஒரு குருவானவர் சொல்லக்கேட்டு, தான் இலங்கைக்குச் சென்று குருக்களின் உதவியில்லாமல் தவிக்கும் கத்தோலிக்க மக்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற ஆசை அவருடைய உள்ளத்தில் உதித்தது. இதற்காக அடிகளார் செபித்து வந்ததோடு இவ் எண்ணத்தை செயல்படுத்துவதற்குரிய வழி வகைகளையும் ஆராய்ந்து வரலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 3

# இந்தியாவில் ஆரம்பகாலக் குருத்துவப் பணிகள்

## சொந்த மண்ணில் குருத்துவப் பணி

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும் சொந்த இடமான சண்கோலில் பணிசெய்ய அனுப்பப்பட்டார். சண்கோலிலும் அயற்கிராமங்களிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். பக்தியுடன் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இறைவார்த்தையை எடுத்துரைத்து மறையுரையாற்றினார். ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றல், இறந்தோருக்காகச் செபித்தல் போன்ற விடயங்களிலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்.

"ஆன்மாக்களின் தேவையையும், அவற்றின் புனிதத்துவத்தை பேணவும் அவர் ஆரம்ப காலத்தில் இருந்தே பணிசெய்யத் தொடங்கினார். அவரது பிரசங்கத்தினால் பலரும் ஈர்க்கப்பட்டார்கள். சிறந்த பிரசங்கியாக பெயர் பெற்ற இவர் பலரின் மனமாற்றங்களுக்குத் தூண்டியாக இருந்தார். அப்போதைய கோவைப் பிராந்தியத்தின் அரச மேலாளராக இருந்தவர் தனது வாழ்வையும் மாற்றி நிர்வாகத்தையும் சீர்செய்யுமளவுக்கு யோசவ்வாஸின் ஆன்மீகப் போதனை வலுவானதாக இருந்தது. 1677இல் மரியன்னையின்மேல் கொண்ட அதீத பக்தியினால் "நான் மரியன்னையின் அடிமை" என்று ஒரு பத்திரத்தில் எழுதி கையெழுத்திட்டு ஒரு உறுதி மொழியை எடுத்துக்கொண்டார்.

அவர் சண்கோலில் பணியாற்றிய ஐந்து வருடங்களுக்குள், தனது எதிர்காலத்தின் கடுமையான பணிக்கான உடன் ஊழியங்களை உருவாக்கும் பணியினைத் தன்னை அறியாமலேயே மேற்கொண்டிருந்தார். இங்கு இலத்தீன் பாடசாலை ஒன்றினை ஸ்தாபித்து, இளைஞர்களை ஒன்றிணைத்துக் கல்வியை ஆரம்பித்தார். இப்பணியின் மூலம் உருவாகி குருக்களாக மாறிய யோசே கார்வாலோ, யோசே தே மெனரோஸ் போன்றவர்கள் பின்நாளில் இலங்கைக்கு வந்து இவரோடு இணைந்து உடன் பணி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கன்னடத்தில் ஆற்றிய இறைபணி

யோசவ்வாஸ் அடிகளார் சண்கோலில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே, இலங்கையில் நிலவிய துர்ப்பாக்கிய சூழலையும், ஒல்லாந்தரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்கோண்மை ஆட்சியால் கத்தோலிக்கம் முற்றாக ஒடுக்கப்பட்டிருப்பதனையும் அறிந்தார். இலங்கைக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற பேரவா அவருக்குள் துளிர்த்திருந்தது. ஆனால் இலங்கைக்கு இலகுவில் செல்ல முடியாது என்பதும், அங்கு போவது தற்கொலைக்கு ஒப்பானது என்பதையும் கோவா திருச்சபை நன்கறிந்திருந்தது.

எனவே யோசவ்வாஸ் அடிகளார் அங்கு செல்வதற்கு எந்த சாதகமான குறிப்பையும் கோவா மறைமாவட்டம் காட்டவில்லை, இறைவனும் அவரை நன்கு தயார்படுத்த நினைத்தாரோ என்னவோ இலங்கையை ஒத்தவகையான சிக்கல்கள் நிறைந்த கன்னட மாநிலத்திற்கு பணி தேடிக்கொள்ளும் அழைப்பு யோசவ்வாஸ் அடிகளாருக்குக் கிடைத்தது. அதனை மகிழ்வுடன் ஏற்று, தனது சகோதரியின் மகனான இளைஞன் யோசேவ் கர்வாலோவையும் அழைத்துக்கொண்டு 1681 மார்ச் மாதம் கால்நடையாகவே கன்னடம் சென்றார்.

கன்னடத்தில் திருச்சபை நிலைமை மிகவும் சிக்கல் நிறைந்ததாய் இருந்தது. ஆன்மீக வழிகாட்டிகள் இன்றி அந்த மக்கள் மிகுந்த அல்லல்பட்டதைக் கண்டு மனம் வருந்தினார். சிதறிக்கிடந்த மக்களை ஒன்றிணைத்து சிறிய சிறிய கோவில்களை அமைத்து கத்தோலிக்கத்திற்குப் புத்துயிர் அளித்தார். பாடசாலைகளை நிறுவி கல்வியைத் தொடர வழிசெய்தார். அரசியல் கலகங்களால் இன்னல்பட்ட மக்களுக்கு தன்னிடமிருந்த பொருள் பணம் யாவற்றையும் கொடுத்து உதவினார். ஊழியர்களிடம் பிச்சைபோல் உணவு பெற்றே தனது பசியையும் போக்கினார். துர்நடத்தையாளர்கள் சிலரைக் கண்டித்தார், கல்லெறியப்பட்டு படுகாயமடையுமளவுக்கு பணி செய்தார்.

கத்தோலிக்க பரிபாலகர்களுக்கும், மறை அறிவிப்பாளர்களுக்கும் இடையிலான முரண்பாடு திருச்சபையின் வளர்ச்சிக்கு அங்கு பெரும் பின்னடைவைக் கொடுத்திருந்தது. அதாவது பத்துருவாதோ ஆதரவு, விசுவாசப் பரம்புதல் சபை ஆதரவு **(Padroado v/s Propaganda)** என்னும் பிரிவினை மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. பத்துருவாதோ என்பது பற்றியும் விசுவாச பரம்புதல் சபை பற்றியும் சிறிய விளக்கம் இங்கு அவசியமாகும். ஸ்பானிய, போர்த்துக்கேய நாட்டு மன்னர்கள் கீழைத்தேச நாடுகளில் படையெடுப்பை மேற்கொண்டு கத்தோலிக்க மதத்தை இந்நாடுகளில் பரப்புவதை ஊக்கப்படுத்த இந்நாடுகளின் மன்னர்களுடன் கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையர்கள் தனித்துவமான பண்புகளை உள்ளடக்கியதான ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டனர். இதன்படி இந்நாடுகளின் குடியேற்ற மறைமாநிலங்களின்மேல் ஸ்பானிய, போர்த்துக்கேய மன்னர்களுக்கு சில சிறப்பான உரிமைகளும் கடமைகளும் திருத்தந்தையினால் வழங்கப்பட்டன. இது ஞான அதிகாரச் சலுகைகள் எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுருவாதோ எனவும் அழைக்கப்பட்டது. விசுவாசப் பரம்புதல் சபை திருத்தந்தையின் கண்காணிப்பில் மறைபோதக நாடுகளில் இருந்த திருச்சபையின் நிர்வாகத்தைக் கவனிக்கும் சபை ஆகும். இதன்படி போர்த்துக்கேய மன்னரால் நியமிக்கப்பட்ட, அல்லது அவரின் நிர்வாகத்திற்குட்பட்ட திருச்சபை நிர்வாகமும் இருந்தது. திருத்தந்தையின் கண்காணிப்பில் இருந்த விசுவாசப் பரம்புதல் சபை நிர்வாகமும் இருந்தது.

கன்னடத்தில் திரு ஆட்சி நிர்வாகம் இந்த இரு பிரிவினரில் யாருக்குரியது என்னும் போட்டியும் முரண்பாடுகளும் கத்தோலிக்கர் மத்தியில் பெரும் இடைஞ்சலாகவும், பிற மதத்தவர் மத்தியில் அவமானமாகவும் விளங்கியது.

எவ்வளவோ தேவைகள் இருந்தும் அங்கு குருக்கள் அனுப்பப்படவில்லை. இவற்றையெல்லாம் கண்டித்து துணிந்து யோசவ்வாஸ் அடிகளார் அதிமேற்றாணியாருக்கு கடிதங்கள் வரைந்தார். அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கடிதங்களால் அவரை எதிரியாகவே நோக்கினர். ஆனால் மனந்தளராது மூன்று ஆண்டுகள் கன்னட தேசத்திலே பணிசெய்தார். அவர் ஆற்றிய சேவையும், பணியும் எங்கும் பரவியிருந்தது. ஆயினும் அவருடைய சபையினர் அவருடைய அர்ப்பணிப்புமிக்க சேவையைக் கண்டனக் கடிதங்களின் முற்சார்பினால் கண்டுகொள்ளவில்லை. இதனால் கன்னடத்தில் தனது பணியை நிறைவுசெய்தவராய் அடிகளார் கோவா திரும்பினார். அவர் கன்னடத்தில் பணியாற்றிய காலத்தில் தந்தையார் கிறிஸ்தோப்பர் வாஸ் இறைவனடி சேர்ந்தார்.

## தியான போதனையில் அடிகளாரின் பங்களிப்பு

கன்னடாவில் திருஆட்சி தொடர்பான பிரச்சினைக்கு யோசவ்வாஸ் அடிகளார் கையாண்ட வழிமுறைகளும், அங்கு அவர் தனது பணியை இடைநிறுத்திய விதமும் கோவாத் திருச்சபைக்கு அதிருப்தியைக் கொடுத்திருந்தது. இதனால் கோவா திரும்பிய அவருக்கு குறைந்த அளவு வரவேற்பே கிடைத்தது.

ஆன்மாக்களை மீட்பதில் அவருக்கு இருந்த ஆர்வம், கடின உழைப்பு, மக்கள் மத்தியில் இருந்த பெருமதிப்பு இவற்றின் மத்தியில் கோவாத் திருச்சபை இவருக்கு எவ்வித பங்குப் பணியையோ, குருத்துவப் பணிப் பொறுப்புக்களையோ வழங்கவில்லை. அவரும் கோவாவில் எந்தவித பங்குப் பணியையும் ஏற்பதில் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் இலங்கைக்குச் செல்வது பற்றிய தனது திட்டத்தை வெளிப்படுத்தவும் இல்லை. கன்னடாவுக்குச் செல்வதற்கு முன்னர் இருந்ததுபோலவே மறையுரை ஆற்றுவதற்கும், பாவமன்னிப்பு அருட்சாதனத்தை வழங்குவதற்கும் மட்டுமே அதிகாரம் உள்ளவராக விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்களில்தான் அவருக்கு தியான போதனையில் பங்கேற்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அவர் இலங்கைக்கான தமது பயணம் பற்றித் திட்டமிட்டுக்கொண்டிருந்தபோது போர்த்துக்கேய மொழியில் மட்டுமே மறையுரையாற்றக்கூடிய இரண்டு குருக்கள் கோவாவுக்கு வந்திருந்தனர். இவர்கள் சுதேச மக்களுக்கு மறையுறையாற்றுவதற்கு மொழிபெயர்ப்புப் பணியை ஆற்ற ஒரு குருவின் உதவி தேவைப்பட்டது. அவர்கள் அடிகளாரின் உதவியை நாடினர்.

பல குருக்களுக்குப் பொறுப்பாய் இருந்து மறைக்கோட்ட முதல்வராகப் பணியாற்றியபோதும் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றும் எளிமையான பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டமை அவருடைய தாழ்ச்சிக்கு அடையாளமாக இருந்தது.

சில காலங்களாகக் கிராமம் கிராமமாக கோவா தீவுகளுக்குச் சென்று இரு குருக்களினதும் போர்த்துக்கேய மொழிப் போதனையை தமது தாய் மொழியில் அழகாக எடுத்துரைத்தார். இது இலகுவான பணியல்ல. ஐரோப்பிய மொழியின் நுட்பங்களில் வெளிப்படும் கருத்துக்களை உடனடியாக இந்திய மொழியில் எடுத்துரைக்க வேண்டும்.

இருவர் மறையுரையாற்ற வாஸ் அடிகளார் ஒருவர் மட்டுமே மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். இதனால் அவர் மிகக்கடினமாகப் பணியாற்றவேண்டி இருந்தது. இரு போதகர்களின் பணிக்கு நிகரான பணியை அவர் செய்யவேண்டி இருந்தது. இத்துடன் நீண்ட பல மணித்தியாலங்களாக பாவமன்னிப்பு அருட்சாதனங்களை அளித்ததோடு சிலுவைப் பாதைத் தியானத்துடன் ஏனைய பக்தி முயற்சிகளையும் நடத்தினார். இவ்வாறான பக்தி முயற்சிகள் வினைத்திறனுடைய பல நற்பயன்களை விளைவித்தன. இவற்றை முதலில் கொங்கணி மொழியில் எழுதினார். இலங்கையில் பணியாற்றிய காலத்தில் இவற்றைத் தமிழிலும் மொழிபெயர்த்தார். பணியின் ஆர்வத்தினால் ஆட்கொள்ளப்பட்டவர் தமது உடல் நலத்தையும் கவனியாது செயற்பட்டார்.

இத்தியான போதனைகள் பாரிய நற்பயனை விளைவித்தன. எல்லா இடங்களிலும் புத்துணர்ச்சியையும் புதுப் பொலிவையும் ஏற்படுத்தின. பலரின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு இப்பணியில் அடிகளாரின் பங்களிப்பு காத்திரமானதாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 4

## ஒரற்ரோறியன் சபையை நிறுவுதலும் இலங்கை நோக்கிய பயணத்தின் ஆரம்பமும்

இலங்கைக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற பேராவலை இறைவன் வாஸ் அடிகளாருடைய உள்ளத்தில் தோற்றுவித்திருக்க வேண்டும். எனவேதான் அதை நோக்கிய செயற்பாடுகளில் அடிகளார் தன்னையும் அறியாமல் ஈடுபடலானார்.

இலங்கையில் பணியாற்றுவதற்கு தமது குரு நண்பர்கள் தமக்கு உதவுவார்கள் என அவர்களை நாடியபோது அம்முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. இலங்கையில் ஆற்றவேண்டிய பணி போன்றதொரு பணியை அவர் கன்னடத்தில் ஆற்றினார். இந்த அனுவபம் இலங்கையில் இவர் ஆற்றப்போகும் பணிகளுக்கு இறைபராமரிப்பு இவரை தயார் செய்தது எனக் கொள்ளமுடியும்.

இலங்கையில் இவர் தனியே பணி செய்திருந்தால் இவருடன் இப்பணிகள் முடிவுபெற்றிருக்கும். இலங்கைக்கு முக்கியமாக வேண்டியது என்னவெனில் அங்கு சென்று அம்மக்களின் மொழியைக் கற்று பல சிரமங்கள் மத்தியில் பணியாற்றக்கூடிய குருக்களை தொடர்ச்சியாக அனுப்புவதாகும். ஒரு துறவற சபை இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

### ஒரற்ரோறியன் சபையை நிறுவுதல்

யோசவ்வாஸ் அடிகள் கன்னடத்தில் பணியாற்றிய காலத்தில் கோவாவில் சில குருக்கள் குழுமமாக இணைந்து வாழ்வது பற்றிக் கேள்விப்பட்டார். ஆனால் இது எந்த வகையிலும் ஒரு துறவற சபை அல்ல. இதில் மூன்று குருக்களும் ஒரு உப தியாக்கோனும் இணைந்து உலக வாழ்விலிருந்து ஒதுங்கி ஒரு நேர அட்டவணைப்படி வாழ்ந்து தங்கள் ஆன்மீக வாழ்வில் நிறைவுகாண முற்பட்டனர். இவர்கள் கோவா பேராயரின் அனுமதியைப் பெற்றிருந்தனர்.

இந்த எளிய முயற்சியில் யோசவ்வாஸ் அடிகளார் இறைவனின் வழிகாட்டலைக் காண முற்பட்டார். தமது இலங்கைக்கான பணித் திட்டத்திற்கு ஆதரவையும், உதவியையும் பெற்றுக்கொள்ளக்கூடிய குருக்கள் குழுமமாக இவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். இச்சிறிய குழுமத்தின் குறிக்கோளையும் செயற்பாடுகளையும் இவர் இலங்கை பக்கம் திருப்ப இறைபராமரிப்பும் வழிகாட்டலுமே இவரை இதில் இணைய வைத்தது. 1685ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி அடிகளார் இக்குழுமத்தில் இணைந்துகொண்டார்.

இவரது தியாகம், அர்ப்பணிப்பு, தாழ்மை அனைத்தும் அச்சபையினரை வெகுவாகக் கவர்ந்தது. ஆறு மாதங்களில் அச்சபையினரின் தலைவராக இவரை மாற்றினார்கள். சுதேச சபையாகிய அச்சபையில் ஒழுங்கான சட்டதிட்டங்கள் இல்லாதது கண்டு, அதனைச் சீர்செய்ய விரும்பிய யோசவ்வாஸ் அடிகளார் புனித பிலிப்நேரியாரின் தியான சம்பிரதாயங்களை பின்பற்றி சபை ஒழுக்கங்களைத் தயாரித்தார். மிகக் குறைந்த துறவிகளே இருந்த சபையில் அதன்பின் பலர் இணையத்தொடங்கினர்.

பேராயரினதும், குருமுதல்வரினதும் எதிர்ப்பின் மத்தியில் திருத்தந்தையும், போர்த்துக்கல் மன்னனும் தங்கள் அங்கீகாரத்தை வழங்கியமை இலங்கையில் இவரது சாதனைக்கு வழிவகுத்தது. புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாயக் குருக்கள் சபை **(Congregation of the Oratory of St. Philip Neri)** என இச்சபை அறியப்பட்டது. இச்சபையின் 150 வருட பணிக்கால வரலாற்றில் இலங்கையின் விசுவாசத்தைக் காத்ததே இச்சபையின் முக்கிய பணியாய் அமைந்தது.

## இலங்கை நோக்கிய பயணத்தின் ஆரம்பம்

சபையை ஒழுங்குபடுத்தியவர் தலைமைப் பொறுப்பினை மீண்டும் அருட்திரு. பாஸ்கோல் என்ற மூத்த துறவியிடம் ஒப்படைத்துவிட்டு இறுதியாக சபையிலே இணைந்த பாஸ்கோல் டி சொய்சா, அருட்சகோதரர் ஸ்ரீபன் சிக்குயீரா ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு இலங்கை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்தார். தனது இலங்கைப் பயணம் தொடர்பாக அவர் கடுமையான இரகசியத்தைப் பேணவேண்டி இருந்தது. தனது குடும்பத்தவர்களுக்குக்கூட தமது இலங்கைப் பயணம்பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

தனது குழுத் தலைவரின் ஆசீர்வாதத்துடன் 1686 மார்ச் மாதம் அவர் கோவாவை விட்டு தமது இலங்கைக்கான நீண்ட, கடினமான பயணத்தை பாதணிகளோ, கோலோ, பணப்பையோ இன்றி ஆரம்பித்தார். இப்பயணம் ஏழ்மையாக அவர் மேற்கொள்ளும் புதிய குழுவின் மறைபோதக பயணமே என்னும் தோற்றப்பாட்டை ஏற்படுத்த ஆறுதலாக, கன்னடா நாட்டிற்குச் செல்லும் வழியிலுள்ள தமது முன்னைய பணித்தளங்களில் உள்ள மக்களைத் தரிசித்து அவர்களுக்கு பணிசெய்துகொண்டே சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரின் பணி இவ்வாறு 9 மாதங்கள் இடம்பெற்றமையினால் இவர் இலங்கை நோக்கி தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என எவரும் சிறிதும் சந்தேகிக்கவில்லை. 1687இல் கேரளா பகுதியில் உள்ள ரெலிசேரி என்னும் இடத்தில் அவர் தம்மோடு வந்த இரு நண்பர்களுக்கும் இலங்கை செல்வதற்கான தமது திட்டத்தை வெளிப்படுத்தினார். இத்திட்டத்தை கேட்டவுடன் இதில் அடங்கியுள்ள ஆபத்தை அறிந்த இருவரும் பின்வாங்கினர். யோசப்வாஸ் அடிகளை விட்டுவிட்டு கோவா திரும்பினர். இப்படி இருவர்கள் பின்வாங்குவர் என்பதை எதிர்பார்த்துத்தானோ அடிகளார் மிகவும் பிரமாணிக்கமுள்ள யோண் என்பவரை அழைத்து வந்திருந்தார். இருவரும் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

கன்னடத்திலும் கேரளாவிலும் பணியாற்றிய காலங்களில் அவர் தமிழைக் கற்றுக்கொண்டார். கேரளாவில் தமது இலங்கைப் பயணத்தைக் குறித்து இயேசு சபைக் குருக்களுக்கு வெளிப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் நாடினார்.

இயேசுசபைக் குருமாரின் ஆலோசனையின்படி தனது குரு உடையை களைந்து, கம்பனியினரின் அடிமை அணியும் காவி உடையை அணிந்தவாறு தூத்துக்குடி வந்துசேர்ந்தார். தூத்துக்குடியில் இருந்தும் உடனடியாக பயணம் மேற்கொள்ள முடியவில்லை. அப்போதைய போக்குவரத்து நடைமுறைகள் மிகவும் கடுமையாக இருந்தன.

இவர் ஒரு குரு என்றும், மாறுவேடத்தில் இலங்கை புகவுள்ளார் என்பதனையும் அறிந்துகொண்ட தூத்துக்குடி அதிகாரி கடுமையான உத்தரவு பிறப்பித்தான். அடிகளார் மிகவும் உருக்கமுடன் இறைவனை வேண்டினார். குறுகிய காலத்தில் அவன் நோய்வாய்ப்பட புதிய அதிகாரி வந்தான். அவனிடம் இரப்பவர்போல் வேடமிட்டு சென்ற அடிகளார் உத்தரவு பெற்றார்.

இலங்கை சென்று உழைத்து அன்றாட சீவியம் நடத்துவதற்கு விண்ணப்பித்திருந்தவர்கள் பட்டியலில் வாஸ் அடிகளாரின் பெயரும் யோணின் பெயரும் இருந்தது. இவர்கள் ஒரு கத்தோலிக்க குருவும் அவருடைய பணியாளரும் என்பது அதிகாரிகளுக்குத் தெரியாது. இதனால் 1687 ஏப்ரல் மாதம் இவர்கள் இருவருக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இறைபராமரிப்பு யோசவ்வாஸ் அடிகளின் கொழும்பு நோக்கிய பயணத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியது. தனது 35வது வயதில் 10 வருட குருத்துவ அனுபவத்துடன் இலங்கைக்குப் புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் – 5

# இலங்கையை அடைதலும் யாழ்ப்பாணத்தில் பணிபுரிதலும்

### கடினமான கடற்பயணம்

தூத்துக்குடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி யோசவ்வாஸ் அடிகளும் அவரது உதவியாளர் யோணும் ஏனைய பலருடன் தமது படகுப் பயணத்தை ஆரம்பித்தனர். இரப்பவர் வேடம் தாங்கியவராகவே வாஸ் அடிகளார் இருந்தார். இவர்கள் தங்களுடன் பூசைக்கல்லையும், புனித பாத்திரங்களையும் எடுத்து வந்தமையினால் பயத்துடனும், மனச் சஞ்சலத்துடனும் காணப்பட்டனர். பயணப்பொதிகள் எதுவும் இல்லாதவர்களாக இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை வைத்துப் பயணித்தனர்.

மிகவும் வறியவர்களாகக் காணப்பட்டதால் சோதனையில் இருந்து தப்பிக்கொண்டனர். எனினும் மறுகரையில் இறங்கும்போது என்ன ஆபத்து நேருமோ என்னும் ஆதங்கம் அடிகளாரை வாட்டியது. அடிகளார் பயணித்த தோணியில் வந்த ஒரு போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கை நிலமைபற்றிக் கேட்டறிந்தார். அம்மனிதர் அடிகளாருக்கு உதவுவதாக வாக்களித்தார்.

வாஸ் அடிகளார் பயணித்த தோணி ஆழ்கடல் சென்றபோது கடற்கொந்தளிப்பும், கடும் காற்றும் அன்றைய தினம் பயணத்தைக் கடினமாக்கியது. இவ்வாறு கடற்கொந்தளிப்பும் காற்றின் பலத்த வேகமும் மன்னார் குடாவில் இடம்பெறுவது வழக்கமான நிகழ்வாயினும் அன்றைய தினம் வித்தியாசமாகவே காலநிலை காணப்பட்டது.

தூத்துக்குடியில் இருந்து நான்கு நாட்கள் பயணத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவேண்டிய படகு, இடையில் ஏற்பட்ட பெரும்புயலில் அகப்பட்டு, திசை தெரியாமல் அலைந்து 20 நாட்களின் பின்னர் மன்னார்க் கரையை அடைந்தது. நல்ல உணவு இல்லாமலும் புயலின் கோரத்தாலும் நன்கு களைத்துப்போன இருவரும் குற்றுயிராகவே இலங்கை வந்து சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரை அடைதல்

முதலில் உதவுவதாகக் கூறிய போர்த்துக்கேயரை கரையிறங்கியபோது காணவில்லை. வாஸ் அடிகள் மன்னாரில் கரையிறங்கியபோது இலங்கையிலே அதிக எண்ணிக்கையான கத்தோலிக்கர் வாழ்ந்த பகுதிகளில் மன்னாரும் ஒன்று என்பது அவருக்குத் தெரியவில்லை. இங்குள்ள மக்களே முதன் முதலில் பிரான்சிஸ் சவேரியார் வழியாக கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற்றனர். இதனாலேயே மன்னார்த் தீவு 'மறைசாட்சிகளின் தீவு' எனப் பெயர் பெற்றது. இத்தீவில் குழந்தைகள், பெண்கள் உள்ளடங்கலாக 600 – 700 வரையிலான மக்கள் தமது விசுவாசத்திற்காக உயிர்த்தியாகம் செய்தனர்.

யோசவ்வாஸ் அடிகள் இலங்கையை அடைந்த காலத்தில் ஏனைய இடங்களைப் போன்று மன்னாரிலும் கத்தோலிக்கர் துன்புறுத்தப்பட்டாலும், இப்பகுதியில் வாழந்தோர் ஏனைய பகுதிகளில் வாழ்ந்தோரைவிட சற்று ஆறுதலும் உதவியும் பெறக்கூடியதாயிருந்தது. இப்பகுதி முத்துக்குளித்துறையுடன் (இந்தியா) கொண்டிருந்த நெருக்கமான தொடர்பு காரணமாகவும், இயேசு சபையினர் இப்பகுதியில் விசுவாசத்தைப் பரப்பியதன் காரணமாகவும் தூத்துக்குடிப் பகுதியில் இருந்து இயேசு சபையினர் தங்கள் மறையாசிரியர்களை இங்கு அனுப்பி ஆங்காங்கே மக்களுக்கு மறையறிவை அளிக்க ஆவன செய்தனர். மக்களும் தென் கரையோரத்திற்கு (தென் இந்தியா) சென்று திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் இருந்தன. மன்னாரில் கரையிறங்கும் நோக்கத்தைக் கொண்டிராத யோசவ்வாஸ் அடிகளார் கடற்கொந்தளிப்புக் காரணமாக மன்னாரை அடைந்தபோது இந்த விடயங்களை அறிந்திராதவராய் மக்களுடன் தொடர்புகொள்வதற்கு முயற்சிக்கவில்லை என அறியப்படுகிறது.

கையில் பணம் எதுவும் இல்லாமல் வந்த வாஸ் அடிகளார் மன்னாரில் சிறிது காலம் தங்கி வீடுவீடாகச் சென்று பிச்சையெடுத்தார். யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணத்தை மேற்கொள்வதற்கான உடற்பலத்தைச் சிறிது சிறிதாகப் பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பகுதி ஒல்லாந்த நிர்வாகத்தினரால் மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நடத்தப்பெற்ற தோணி மூலம் தூத்துக்குடியில் பெற்ற அனுமதியின் அடிப்படையில் வாஸ் அடிகளும் யோணும் யாழ்ப்பாணம் நோக்கிய தமது பயணத்தை மேற்கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் பணி ஆரம்பம்

## வைசூரி நோயால் தாக்கப்படல்

1687 மே மாதமளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அடிகளார் தங்குவதற்கு இடந்தேடி அலைந்து ஈற்றில் ஒரு பெண்ணின் தயவில் அவரின் வீட்டுத் திண்ணையில் உறங்கினார். யோண் இரந்து கொண்டுவரும் உணவை உண்டு ஓரிரு நாட்களை கடத்தியபோது மிகப்பெரும் துன்பத்தை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. தீராத வயிற்றோட்ட நோயினால் அடிகளார் பாதிக்கப்பட்டார். வைசூரி நோய் நடைபெற்ற காலமென்பதனால் அவ்வூர் மக்கள் அவரை வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டுபோய் காட்டுப்பகுதியில் விட்டனர். சற்று நாட்களில் யோணும் அதே நோயில் விழுந்தார். மரணத்தின் விளிம்புவரை அவர்கள் சென்றனர். ஈற்றில் இறைவன் அருளால் ஒரு வழிப்போக்கரான பெண்ணின் தயவினால் அவள் கொடுத்த கஞ்சியைக் குடித்து தேறினார்கள்.

## கத்தோலிக்கரை இனம்காணும் முயற்சி

நோயினாலும் பசியினாலும் மெலிந்து, நீண்ட தாடியுடனும், இரப்பவர்க்குரிய அடிமை உடையுடனும் உண்மையான இரப்பவர்களாகவே மாறி இருவரும் கத்தோலிக்கர்களைத் தேடத் தொடங்கினார்கள். வாஸ் அடிகளார் கழுத்திலே நீண்ட செபமாலை ஒன்றை அணிந்திருந்தார். அதுவே அவர் தன்னை அடையாளம் காட்ட வைத்துக்கொண்ட ஒரே அடையாளம். யாழ்ப்பாணத்தில் கல்வின் மதத்தைத் தவிர எதையும் பின்பற்ற முடியாது என்ற இறுக்கமான சட்டத்தால் கத்தோலிக்கர்கள் எவரும் தம்மை நேரடியாக வெளிப்படுத்த முடியாதிருந்தனர்.

குருக்களின் உதவியில்லாமல் ஒல்லாந்தரால் ஒடுக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் பெரும்பாலும் பிறமதத்தவர்களைப்போலவே வாழ்ந்துவந்தார்கள். ஆகவே, கத்தோலிக்கர் யார்? பிற மதத்தினர் யார்? என்று கண்டுபிடித்தல் யோசவாஸ் அடிகளாருக்கு பெரும் சிரமாக இருந்தது. கத்தோலிக்கரைத்தேடி அவர் வீடு வீடாகத் திரிந்து பிச்சை எடுத்துவந்தார். நம்பிக்கைக்குரிய ஒரு கத்தோலிக்கரைக் கண்டறிந்த பின்னரே யோசவ்வாஸ் அடிகள் தாம் யார் என்பதை வெளிப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் “பவுலோ டி பாரஸ்” (Paulo de Barros) என்ற பறங்கிய செல்வந்தரே அந்த நம்பிக்கைக்குரிய கத்தோலிக்கர் என அறிய முடிகிறது. இவரே யாழ்ப்பாணத்தில் அடிகளாரைத் தாபரித்து வந்தார்.

ஏறக்குறைய 30 வருடங்களாக குருமாரைக் காணாமலும், திருப்பலியில் பங்குபற்றாமலும், அருட்சாதனங்களைப் பெறாமலும் தவித்துக்கொண்டிருந்த கத்தோலிக்க மக்கள், இச்செய்தியைக் கேட்டு ஆனந்தமடைந்து, தங்களைத் தேடி வந்த குருவானவரைப் பாதுகாப்பதற்கும், அவருடைய ஆன்மீக உதவிகளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை இரகசியமாக எடுத்துவந்தனர். இராக்காலங்களிற் கத்தோலிக்கர் வெவ்வேறு இடங்களில் இரகசியமாகக்கூடி, திருப்பலியில் பங்குபற்றி அருட்சாதனங்களைப் பெற்று, அடிகளாரின் மறையுரையையும் கேட்டுவந்தார்கள், யாழ்ப்பாணத்தில் ஒரு கத்தோலிக்க குருவானவர் இரகசியமாக வரக்கூடுமென்று ஒல்லாந்த அதிகாரிகள் எதிர்பாராதிருந்தமையால், யோசவாஸ் அடிகளார் யாழ்ப்பாணத்திலேயே சிலகாலம் தங்கியிருந்து பணியாற்றிவந்தார்.

## சில்லாலைக்குச் செல்லுதல்

அவருக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்று யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் பயந்து யாழ்ப்பாண நகரத்திற்கு அப்பால் உள்ள ஓர் இடத்தில் பாதுகாப்போடு தங்கியிருக்கும் பொருட்டு அவரைச் 'சில்லாலை' என்ற கிராமத்திற்கு அனுப்பி வைத்தனர்.

சில்லாலையில் இருந்த கத்தோலிக்கர் விசுவாசத்தைப் பாதுகாப்பதிலும் நல்வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய ஊர் 'சின்ன றோமை' என்று அழைக்கப்பட்டு வந்தது. ஒல்லாந்தருடைய சட்டங்களுக்கு அஞ்சாமல் தங்களுக்குள் ஒருவரை மூப்பராக நியமித்து, போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட சிறிய ஆலயத்தில் கூடி, அவருடைய தலைமையின்கீழ் செபம்செய்து வந்ததுமல்லாமல், எல்லாச் செயற்பாடுகளிலும் அவருடைய சொற்படி நடந்துவந்தார்கள். ஒல்லாந்தரும் அவர்களைத் துன்புறுத்தத் துணியவில்லை.

யோசவாஸ் அடிகளார் இந்த இடத்தில் தங்கியிருந்துகொண்டு யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல்வேறு இடங்களைத் தரிசித்து, அவ்விடங்களில் இருந்த கத்தோலிக்கரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அவர்களுக்கு அருட்சாதனங்களை வழங்கிவந்தார். வேதத்தை மறுதலித்தவர்களை வீடுவீடாகத் தரிசித்து அவர்களில் பலரையும், சில புரொட்டஸ்தாந்தரையும் இந்துக்களையும் மனந்திருப்பினார்.

எதிர்பாராதவிதமாக ஒரு குருவானவரின் உதவியைப்பெற்ற கத்தோலிக்க மக்கள், விசுவாசத்தில் திடமும் புத்துணர்ச்சியும் பெற்றுவந்தனர். கத்தோலிக்க வழிமுறைகளை தங்கள் இல்லங்களில் துணிவுடன் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இரவில் அவர்களுடைய இல்லங்களில் செபங்களும், செபமாலையின் ஓசையும் பக்திக் கீதங்களும் போர்த்துக்கேயர் காலத்திற் கேட்கப்பட்டதுபோல் கேட்கப்பட்டன. பல அற்புதங்கள் சில்லாலையில் நடைபெற்றதாகக் கூறுவர், இரவு வேளைகளில் வழிபாடுகளையும், திருப்பலிகளையும் அடிகளார் நிறைவேற்றினார். யாழ்ப்பாணத்தில் நீறுபூத்திருந்த கத்தோலிக்க விசுவாசம் வாஸ் அடிகளாரின் வருகையினால் பிரகாசமாய் பற்றி எரியத் தொடங்கியது. இச்செய்தி நாலாபக்கமும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிகளாரைக் கைதுசெய்யத் திட்டம்

இந்த மறுமலச்சியை யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த ஹென்றிக்கு வன்ரீ என்ற ஒல்லாந்த அதிகாரி ஆச்சரியத்துடன் அவதானித்தான். அவர்கள் மத்தியில் ஒரு குருவானவர் வந்திருப்பதையும், அவர்கள் இராக்காலங்களில் வீடுகளில் இரகசியமாகக்கூடி இறை வழிபாடுகள் நடாத்துவதையும் அறிந்து, அவர்களையும் குருவானவரையும் கைது செய்யத் திட்டம் வகுத்தான்.

## சில்லாலையில் கலவரமும் முதல் வேதசாட்சி மரணமும்

1689ஆம் ஆண்டு இயேசுவின் பிறப்புத்திருநாள் இரவில், யோசவாஸ் அடிகளார் யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்த விசுவாசிகள் செபமாலை சொல்லிக்கொண்டிருந்தனர். அவர் முதலாவது இடத்தில் திருப்பலியை முடித்து வெளியேறியவுடனே, வான்றீயின் போர்ச்சேவகர்கள் அவ்விடத்தை முற்றுகையிட்டு பீடத்தை உடைத்துத் திருச்சுரூபங்களை அவமரியாதை செய்ததுடன் 300 பேரளவிலான விசுவாசிகளையும் கைதுசெய்து சிறையிலடைத்தார்கள்.

மறுநாட்காலை எட்டுத்தலைவர்களைத் தவிர, மற்றெல்லாரும் தெண்டம் செலுத்தியபின் விடுதலை செய்யப்பட்டனர். தலைவர்கள் எண்மரும் கத்தோலிக்க வேதத்தை மறுதலிக்கும்படி பலவிதமாக சித்திரவதை செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நின்றனர். அதில் தொன் பேதுரு என்பவர் சவுக்குகளால் கொடுமையாக அடிபட்டு மரித்தார். மற்றைய 7 பேரும் சிறையிலிடப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டுவதற்குக் கல் சுமந்து அனுபவித்த கொடிய வேதனைகளினால் இறந்தார்கள். **இவர்களே யாழ்ப்பாணத்தின் முதல் வேதசாட்சிகள்.** வான் றீ எவ்வளவோ முயற்சி எடுத்தும் யோசவாஸ் அடிகளாரைக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

## வாஸ் அடிகளார் தப்பிச் சென்றமை

வாஸ் அடிகளார் அன்றைய தினம் மூன்று இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுத்தபோதும் டச்சுப் படைகளால் அவரைக் கைதுசெய்ய முடியவில்லை. மூன்று பகுதிகளில் அடிகளாரைக் கைது செய்யச் சென்றவர்கள் மற்றைய இடத்திலேயே குரு இருக்கிறார் என எண்ணினர். கைதிகள் எல்லோரையும் ஒரே இடத்தில் ஒன்றுகூட்டியபோதே குரு தப்பிவிட்டார் என்பதை அறிந்தனர். தங்கள் குரு தப்பிவிட்டார் என்ற செய்தி கத்தோலிக்க மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் – 6

# கண்டி இராச்சியத்தில் அடிகளாரின் பணி

### புத்தளம் வழியாகக் கண்டி செல்லல்

யாழ்ப்பாணக் கலாபனையில் இருந்து தப்பிய அடிகளார் உடனடியாகவே பூநகரி வந்து சேர்ந்தார். அங்கிருந்து ஒல்லாந்தரின் அதிகாரத்துக்குட்படாத பிரதேசத்துக்கு செல்வதே வழி எனக் கண்டு புத்தளம் பயணமானார்.

கண்டிப்பிரதேசம் 2ஆம் இராஜசிங்கனின் மகன் விமலதர்ம சூரியன் என்னும் அரசனின் ஆட்சிக்குக்கீழ் இருந்து. புத்தளப் பிரதேசம் கண்டி இராச்சியத்துக்குள் இருந்த காரணத்தினால் அங்கு பயமின்றிப் பணியாற்றக்கூடியதாக இருந்தது. கொழும்பில் இருந்த ஒரே குரு குருவான "யுவாம் தே பிரகான் சா" அடிகளாரும், வாஸ் அடிகளார் வந்ததை அறிந்து அவரோடு இணைந்துகொண்டார். இருவரும் இணைந்து பணி செய்யத் தொடங்கினார். அங்கிருந்து பணிசெய்யக் குருக்களை அனுப்புமாறு கொச்சினுக்கு கடிதம் எழுதினார். படிப்படியாக கண்டியில் தனது பணியினை அடிகளார் ஆரம்பித்தார். கண்டி மன்னன் 2ஆம் விமலதர்ம சூரியன் கத்தோலிக்கருக்கு அதிக ம்திப்பளித்தான். இதுகண்டு பொறாமை கொண்ட "லனறோல்" என்பவன் வாஸ் அடிகளார் போர்த்துக்கேயரின் ஒற்றன் எனப் பொய்க்குற்றம் கூறி அடிகளாரையும் யோணையும் அரசன் சிறையில் அடைக்கும்படி செய்தான்.

### கண்டியில் சிறை வாசமும் விடுதலையும்

சிறையில் சொல்லொணா துயரம் அனுபவித்த அடிகளார் தனது மேலான பண்புகளாலும், அணுகுமுறைகளாலும் தன்னைப் பிரகாசிக்கச் செய்தார். இதனை அறிந்த மன்னன் அவரில் கருணை காட்டத் தொடங்கினான். சிறையில் இருந்த காலத்தில் சிங்களம் கற்கத் தொடங்கியதுடன், யோணுக்கும் இலத்தீன் கற்பித்து குருத்துவப் பணிக்கு அவரைத் தயார் செய்யத் தொடங்கினார். சிங்கள அகராதியையும் அங்கிருந்து எழுதினார். மன்னன் காட்டிய கருணையினால் சிறைச்சாலைக்குள்ளேயே சிலுவை ஒன்றினை நாட்டி திருப்பலி நிறைவேற்றத் தொடங்கினார். பலரும் அவரது செயல்களினால் ஊக்கம் பெற்று திருப்பலியில் பங்குகொள்ளத் தொடங்கினர். மன்னரின் அனுமதி பெற்றுப் பலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைக்குள் வந்துசென்றனர். வாஸ் அடிகளாரின் சிறிய குடிசை கோவிலாக மாறியது. இதனை அறிந்த மன்னன், அவர் ஒற்றர் அல்ல உண்மையான குருதான் என்று தெரிந்து விடுதலை செய்தான். விடுதலை செய்தது மட்டுமன்றி அவருக்கு வேண்டிய உதவிகளையும் இன்முகத்தோடு மேற்கொண்டான்.

விடுதலை பெற்ற அடிகளார் கண்டியில் ஓலையினால் ஒரு கோவில் அமைத்து, "மனந்திரும்புதல் மாதாவின்" பெயரில் அதனை அபிஷேகம் செய்து வழிபாடுகளை நடத்தியதுடன் அருட்சாதனங்களையும் நிறைவேற்றினார். அத்தோடு நிற்காது மாறுவேடத்தில் கொழும்புக்குள்ளும் நுழைந்து கத்தோலிக்க வேதம் தளைக்கச் செய்தார். கண்டியில் பொறாமை கொண்டோர், சுதேசிகள், புத்தபிக்குகள் அடிகளாருக்கு எதிராக பல முறைப்பாடுகளை முன்வைத்தும், கிறிஸ்தவ விசுவாசிகளை அச்சுறுத்தியும் பல முட்டுக்கட்டைகளை இட்டனர். அடிகளார் எதற்கும் அஞ்சாது பணி தொடர்ந்தார்.

## மழை பொழியச் செய்த புதுமை

அந்நாட்களில் கண்டி இராச்சியத்தில் கடும் வரட்சி நிலவியது. அங்கு நெல்லரிசிச் சோறே மக்களின் முக்கிய உணவாக இருந்தது. வரட்சியினால் மனிதர்களும் விலங்குகளும் பெரும் துன்பத்திற்குள்ளாகினர். வழமையான மூடநம்பிக்கை முயற்சிகள் எதுவும் மழையை வருவிக்கவில்லை.

வாஸ் அடிகளின் புனித வாழ்வை அறிந்திருந்த அரசன் விமலதர்ம சூரியன் இப்போது அடிகளின் ஆன்மீக ஆற்றலைப் பயன்படுத்த எண்ணி அவரை அழைத்தான். அவரும் அரசனின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். அரச மாளிகையின் முன்னுள்ள முற்றத்தில் தாம் சிறையில் அமைத்திருந்ததைப்போன்றதொரு பீடத்தை அமைத்து அதில் ஒரு சிலுவையை நிறுத்தி மழைவேண்டிச் செபிக்கத் தொடங்கினார். முழந்தாட்படியிட்டு உருக்கமாகச் செபித்துக்கொண்டிருந்தவர் எழுந்திருப்பதற்கு முன்பாக மழை பூமியைத் தொட்டது. ஆச்சரியமானமுறையில் அவர் இருந்த இடத்தில் அவரை நனைக்காமல் மற்ற இடத்தில் பெருமழை பொழிந்தது.

## துணையாளர்களின் வரவு

புத்தளத்தின் ஆலயம் பெரிதாக அமைக்கப்பட்டது. அடிகளார் விடாமுயற்சியோடு, சிலாபம், புத்தளம், மாதோட்டம் வரை நீண்ட பயணங்கள் செய்து கோவில்களை நிறுவி மூப்பர்கள், சங்கிடுத்தாம்களை ஏற்படுத்தி கத்தோலிக்க வேதத்திற்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தினார்.

கண்டி அரசனின் அனுமதியும் ஆதரவும் கிடைத்திருந்த நிலையில் கண்டி இராச்சியத்திலும் ஒல்லாந்தருடைய ஆட்சிக்குட்பட்ட பாகங்களிலும் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் தொகையான கிறிஸ்தவர்களுக்குத் தாமே தனித்து ஆன்மீகத் தொண்டு செய்ய முடியாததைக்கண்டு, யோசவ்வாஸ் அடிகளார் கோவாவில் இருந்த தியான சப்பிரதாய (ஓரற்றோறியன்) சபைத் தலைவருக்குக் கடிதம் எழுதி, தாம் இதுவரை செய்த தொண்டுகளையும் இலங்கைக் கத்தோலிக்கரின் தேவைகளையும் தெளிவாகக்கூறி, தமக்கு உதவியாக வேறு குருக்களையும் அனுப்பும்படி கேட்டார்.

தியான சம்பிரதாயத் தலைவர் அவருடைய கடிதத்தைக்கண்டு களிப்படைந்து, யோசேவ் டெமெனெசெஸ் அடிகளாரையும், யோசவ்வாஸ் அடிகளாரின் மருமகனான யோசேவ் கார்வாலோ அடிகளாரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்தார். அவர்கள் 1696ஆம் ஆண்டின் இறுதியில் பேருது பெறாவோ என்ற குருவானவரோடு யாழ்ப்பாணத்தையடைந்து பின்பு புத்தளத்திற்கு வந்தனர்.

இதற்கிடையில் யோசவ்வாஸ் அடிகளார் இரப்போன் வேடம் எடுத்து, கொழும்பு நகரத்தையும் பின்பு நீர்கொழும்பு, இரத்தினபுரி, வன்னி, மாதோட்டம், மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களில் இருந்த கிறிஸ்தவர்களையும் இரகசியமாகத் தரிசித்து, அவர்களை விசுவாசத்திலுறுதிப்படுத்தி, தவறிப்போனவர்களை மீண்டும் மந்தையிற் சேர்ந்து, அருட்சாதனங்களை அளித்துச் சகலரையும் நல்வழிப்படுத்தினார். ஒல்லாந்தர் அவரைப் பிடிப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் எடுத்தபோதிலும், இறைவன் அவைகளிலிருந்து அவரைக் காப்பாற்றிவந்தார்.

### இரு அதிகாரங்கள்

கோவாவில் இருந்து புதிதாக வந்த குருக்கள் யோசவ்வாஸ் அடிகளாருக்கு இரு அதிகாரப் பத்திரங்களைக் கொண்டுவந்தார்கள். ஒன்று கொச்சின் ஆயராலும் மற்றயது தியான சம்பிரதாயச் சபைத் (ஓரற்ரோரியன்ஸ்) தலைவராலும் வழங்கப்பட்டதாகும். இலங்கை கொச்சின் மறைமாவட்டத்தில் அடங்கியிருந்தபடியால் முதலாவது பத்திரத்தில் கொச்சின் மறைமாவட்டத்தில் யோசவ்வாஸ் அடிகளாரை இலங்கையில் தமது பிரதிநிதியாக (Vicar General) நியமித்து அவருக்குச் சகல ஆன்மீக அதிகாரங்களையும் கொச்சின் ஆயர் வழங்கினார். இரண்டாவது பத்திரத்தினால், யோசவ்வாஸ் அடிகளார் இலங்கையிலுள்ள தியான சம்பிரதாயச் சபைக் குருக்களுக்கு தலைவராக நியமிக்கப்பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 7

## இலங்கை முழுவதிலும் இடம்பெற்ற மறைப்பணி

### பணியிடங்களைப் பிரித்துக்கொடுத்தல்

ஆன்ம ஈடேற்றப் பணியை இலங்கை முழுவதிலும் வெற்றிகரமாகச் செய்யும்பொருட்டுத் தமக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு வாஸ் அடிகளார் ஒழுங்குகளை வகுத்து, புது ஆர்வத்தோடு ஆன்மீகப் பணியாற்றத் தொடங்கினார். யாழ்ப்பாணம், பூநகரி, மாதோட்டம், மன்னார், வன்னி முதலிய பிரிவுகளில் பணியாற்றும்படி பேதுரு பெறாவோ அடிகளை நியமித்தார். புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு முதலிய பிரிவுகளில் இருந்தவர்களுக்கு பணிசெய்ய யோசேவ் டெ மெனசெஸ் அடிகள் நியமிக்கப்பட்டார். அரசனுடைய கட்டளைப்படி கண்டிநகரில் பிரவேசித்தவர்கள், நெடுங்காலம் நகருக்கு வெளியே தங்கியிருக்க முடியாதபடியால், ஆன்மீகப் பிரயாணங்களில் ஈடுபடும்பொழுது ஒருவர் மற்றவருக்குப் பிணையாக இருக்கும்பொருட்டு, யோசவ்வாஸ் அடிகளார் யோசேவ் கார்வாலோ அடிகளைத் தம்மோடுகூட கண்டிக்கு அழைத்துச்சென்றார்.

நற்செய்திப் பணியாளர்கள் நாட்டின் மொழிகளாகிய தமிழையும் சிங்களத்தையும் நன்றாகக் கற்கவேண்டும். விசுவாசத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முரணற்ற பழக்கவழக்கங்களை ஆதரிக்கவேண்டும். தாராள மனத்துடன் தருமம் செய்ய வேண்டும் என்றும், இவைபோன்ற வேறு ஒழுங்குகளையும் வகுத்துக்கொடுத்தார். கத்தோலிக்க சமயம் இலங்கையில் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைவதற்கும், இலங்கைத் திருச்சபை உறுதியாகக் கட்டப்படுவதற்கும் இவ்வொழுங்குகள் பெரிதும் உதவின.

### வைசூரி நோயும் அடிகளாரின் அர்ப்பணிப்பும்

1686 அளவில் கண்டியில் கொடிய உயிர் கொல்லி நோயான வைசூரி வேகமாக பரவியது. நோயாளிகள் கைவிடப்பட்டுக் கிடந்தனர். இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூட தயங்கினர். உடல்களை காடுகளிலே வீசினர். வசதி படைத்தோர் இடம்பெயர்ந்து ஓடித்தப்பினர். இத்தகைய சூழலில் அடிகளாரும் இரண்டு குருமாரும் நோயாளிகளை ஒன்றுசேர்த்து சேவையாற்றத் தொடங்கினர். அவர்களுக்கு கஞ்சி சுமந்து கொண்டுசென்று கொடுத்தல், உடை இல்லாதவர்களுக்கு உடை வழங்குதல், நோயாளிகளின் புண்களை தூய்மைப்படுத்தி மருந்திடுதல், இறந்தோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம் செய்தல் என்று பாரிய பணிகளை செய்து அந்த மனிதப் பேரவலத்திற்கு உதவிபுரிந்தனர்.

இவர்களது சேவையைக் கண்ட பல நோயாளிகள் மனம்மாறி திருமுழுக்குப் பெற்றனர். இவ்வாறு இவர்கள் செய்த அளப்பரிய சேவை மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், மன்னனிடத்தில் அதிக அபிமானத்தையும் பெற்றுக்கொடுத்தது.

அதேவேளை மன்னன் விமலதர்மசூரியன் மருத்துவ நூல் ஒன்றினை ஆக்க விரும்பி போர்த்துக்கேய மொழியில் இருந்த மருத்துவ நூலை மொழிபெயர்ப்பு செய்ய அடிகளாரை நாடினான். அடிகள் அதற்கு உதவினார். அக்காலத்தில் ஞான விசாரணைக்கு (ஆன்மீக சந்திப்புக்களுக்கு) கார்வலு அடிகளை அனுப்பினார். அவர் நீண்ட பயணங்கள் செய்து நோய்வாய்ப்பட்டு 1702 யூலை 22இல் இறந்தார். அவருக்குப் பதிலாக 'தாசல் தானா' என்ற குருவானவர் அனுப்பிவைக்கப்பட்டார்.

## அடிகளின் பயணங்களும் பணிகளும்

இவ்வாறு சவால்களிலும், சோதனைகளிலும் முகங்கொடுத்து கத்தோலிக்க திருச்சபையை இலங்கைக்குள் கட்டி எழுப்பிக்கொண்டிருந்த யோசவ்வாஸ் அடிகள் புத்தளம், சிலாபம், மன்னார், யாழ்ப்பாணம், தீவகம், திருகோணமலை, மட்டக்களப்பு என நீண்ட பயணங்களை மேற்கொண்டு பங்குகளை உருவாக்கியும் மூப்பர்களை நியமித்தும், ஞான விசாரணை செய்தும். அருட்சாதனங்களை வழங்கியும், ஓய்வில்லாமல் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவரது பெருமுயற்சிகளும், அர்ப்பணிப்புமிக்க வாழ்வியலும், இறைபக்தியும், தன்னம்பிக்கையும், திருச்சபையை வேகமாக தழைக்கச் செய்தன.

## மேலும் நான்கு குருக்களின் வருகை

அவரது பணியின் சிறப்பையும் திருச்சபையின் எழுச்சியையும் அறிந்த கொச்சின் மறைமாவட்டம் மேலும் நான்கு குருக்களை இலங்கைக்கு அனுப்பியது. யோசவ் தே யேசு மரியா, மைக்கேல் டி மெல்லோ, மனுவல் எ மிரண்டா, யாக்கோமே கொண்சால்வேஸ் ஆகிய நான்கு குருக்களும் 1705இல் மன்னார் வந்தடைந்தனர். அவர்களோடு இணைந்த வாஸ் அடிகளும் ஏனைய இருவருமாக ஏழு பேரும் வன்னியில் ஒன்றாக 1705 செப்ரம்பரில் திருப்பலி நிறைவேற்றினார்கள்.

வந்த குருக்களை கோவிற்பங்குகளுக்கு ஏற்ப பிரித்து இலங்கைத் திருச்சபையை அடிகளார் சிறப்பாக வழிநடத்தினார். கிறிஸ்தவ உண்மைகளை சுதேசிய மொழிகளில் மொழி பெயர்க்கவும், நூலாக்கவும் முயன்றார். எழுத்தாற்றல் மிக்க யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகளார் இப்பணிக்கு வாஸ் அடிகளாருக்கு உதவினார். 1706 நவம்பர் 26, பரிசுத்த பாப்பரசரினால் இலங்கைத் திருச்சபை அங்கீகரிக்கப்பட்டு பொது நீரோட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் – 8

## அடிகளாரின் இறப்பும் புனிதர் பட்டமும்

### திருச்சபையின் வளர்ச்சி

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் அடக்கி ஒடுக்கி அழிக்கப்பட்டு குற்றுயிராய்க்கிடந்த திருச்சபைக்கு உயிர் கொடுத்த யோசவ்வாஸ் அடிகளாரின் பணி வார்த்தைகளுக்குள் அடக்கப்படக்கூடியது அல்ல, டச்சு ஆதிக்கர்களின் கால் இடுக்குகளுக்குள்ளேயே சத்திய வேதத்துளிரை வளரவிட்டு மரமாக்கியவர். இலங்கையில் அவர் வாழ்ந்த 24 வருடங்களிலும் அவர் எதிர்கொண்ட சவால்கள், சிறைவாழ்வு, உயிராபத்துக்கள், வஞ்சனையாளர்களின் சூழ்ச்சிகள் சொல்லி முடியாதவை. இவைகளையெல்லாம் இறைபக்தியோடு எதிர்கொண்டு அயராது திருச்சபையை வளர்த்தெடுத்தார்.

### இறையடி சேர்தல்

1710 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தனது இறுதிப்பயணத்தினை அளம்பிலி, கெட்டியாரகுடா, திருகோணமலை, மட்டக்களப்பு என முடித்து திரும்பும் வழியில் அடிகளார் நோயுற்றார். அவரை பல்லக்கில் ஏற்றியே கண்டிக்குக் கொண்டுவந்தனர். அவரது உடல் நிலைக்கு பயணம் செய்தல் பொருத்தமற்றது என்று வைத்தியர்கள் கூறி இருந்தும், நோயாளிக்கு அவஸ்தை கொடுக்க ஒருநாள் பயணந்தொடர்ந்தவர் வரும்போது பல்லக்கில் இருந்து விழுந்து அடிபட்டார். அது அவரது கைகால்களை முடமாக்கியது மட்டுமன்றி, தலையில் பெருங்கட்டு உருவாகி காது கேட்க முடியாமலும், தலை வலியினாலும் வருந்தச் செய்தது. நான்கு மாதம் நோயினால் வருந்தி. ஆவணி 10இல் கோவாவுக்கு தனது இறுதிக் கடிதத்தையும் வரைந்துவிட்டு, “மெனெ செஸ்’ சுவாமியை தனது இடத்திற்கு நியமித்துவிட்டு 1711 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நடு இரவு அளவில், பாடுபட்ட இயேசுவின் சிலுவையை கையில் ஏந்தியவாறு பரவசத்துடன் தனது இன்னுயிரை இறைவனிடம் கையளித்தார்.

### அடிகளாரின் புகழ் எங்கும் பரவுதல்

அவர் இறக்கும்போது அவருக்கு வயது 60. இறுதிக்காலத்தில், கொச்சின் மறைமாவட்டம் தான் விட்ட தவறுகளை உணர்ந்து, அடிகளாரை கோவாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் சிறப்பிக்க நினைத்தது. ஆனால் அடிகளார் அவை எதனையும் விரும்பாமல், இலங்கையிலேயே இறுதிவரைப் பணியாற்றி இறந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் இலங்கை நாடு முழுவதும் வரலாறு கண்டிராத எத்தனையோ புதுமைகள் அவருடாக நடந்தேறியதாகக் கூறப்படுகின்றது. அவரது புனித வாழ்வைக் கண்டு அக்கால இலங்கையர் "சம்மனசுச் சுவாமி" என்ற பெயரிட்டே அவரை அழைத்தனர்.

யோசவ்வாஸ் அடிகளின் தூய வாழ்வும், அவர் ஆற்றிய அரும்பணிகளும் அவர் நினைத்ததுபோல மறைந்திருக்க முடியவில்லை. தனது மேலதிகாரிகளுக்கு அவர் எழுதிய கடிதங்களில் தனது பணிபற்றிய சில குறிப்புக்களை மட்டுமே அவர் வழங்கினார். ஆனால் மற்றவர்களின் கடிதங்களில் அவை விரிவாக இடம்பெற்றுள்ளன.

அவர் 60 வயதில் இறந்தபோது அவரைச் சிறுவனாக அறிந்த சிலர் இன்னும் கோவாவில் இருந்தனர். அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய புகழ் இந்தியா, போத்துக்கல், இத்தாலி நாடுகளில் பரவிவிட்டது. அவருடைய வாழ்க்கை பற்றிய சான்றுகள் இலங்கை, இந்தியா, இத்தாலி, போத்துக்கல், ஒல்லாந்து போன்ற நாடுகளின் தொல்லியல் அருங்காட்சியகங்களில் இன்றும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றன.

## புனிதர் பட்டத்திற்கான முன்னெடுப்புக்கள்

யோசவ்வாஸ் அடிகளார் மரணமடைந்து இரு வருடங்களுக்குள் அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட வேண்டுமென்ற முதலாவது முன்னெடுப்பு 1713இல் இயேசு சபையைச் சேர்ந்த கொச்சின் ஆயர் மேதகு பெட்ரோ பச்சேக்கோ (Pacheco) ஆண்டகை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் யோசவ்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் கொடுப்பது மிகச்சிக்கல் வாய்ந்ததாக அப்போது இருந்தது.

மீண்டும் இலங்கைத் திருச்சபைக்குப் பொறுப்பாக இருந்தவரான கொச்சின் ஆயர் இயேசுசபையைச் சேர்ந்த மேதகு பிரான்சிஸ்கோ டி வஸ்கொன்சலோஸ் (Francisco Vasconcellos) ஆண்டகை அவர்களால் இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டதுடன் சில புதுமைகளையும் பதிவு செய்தனர். ஆனால் அவை சில விடயங்களில் தேவைகளை பூர்த்தி செய்யாமையினால் அன்றைய திருத்தந்தை ஆசீர்வாதப்பர் இதனை நிராகரித்தார்.

## வாஸ் அடிகளாரின் பெயரால் இடம்பெற்ற புதுமை

இந்தியாவைச் சேர்ந்த திருமதி. குயிற்றேறியா கார்மெலா என்பவர் திரு.டொமியாவோ டி கொஸ்தா என்பவரை மணந்திருந்தார். அவர் 1938, ஏப்ரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமளவில் கருவுற்றிருந்தார். கார்மெலா சுமார் நான்கு மாதங்களுக்குப் பின்னர் **Hemorrhages** என்னும் நோயினால் பீடிக்கப்பட்டார். இதன் விளைவாக கருச்சிதைவு ஏற்படக்கூடிய நிலையிருந்தது. இதனால் உடனடியாக பெங்களூர் புனித மார்த்தா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஓரிரு மாதங்களின் பின்னர் அவரது நோயின் தாக்கம் அதிகரித்தது. இதனால் மிகவும் ஆபத்தான நிலைக்குச் சென்றார். பின்னர் கார்மெலா அவர்கள் எஸ்கோலர் **(Escolar)** என்னும் பெயருடைய கோன் வைத்தியசாலைக்கு **(Goan Hospital)** மாற்றப்பட்டார். அங்கு இவரைப் பரிசோதித்த பிரதம வைத்திய குழுவினர் இவரைப் பீடித்துள்ள நோயின் பெயர் **"Placenta Praevia"** என அறிவித்தனர். நவம்பர் 26ஆம் திகதி இவரது நோயின் தாக்கம் அதிகரித்துக்கொண்டு சென்றது. குழந்தையைப் பெற்றெடுக்க முடியாத நிலையில் உள்ளார் எனவும் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால்கூட உயிர் பிழைப்பது கடினம் எனவும் வைத்திய குழுவினர் தெரிவித்துவிட்டனர்.

அன்று அவரது பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் இணைந்து கார்மெலாவின் நோய் நீங்கவும், குழந்தை சுகமாகப் பிரசவிக்கவும் யோசவ்வாஸ் அடிகள் ஊடாக இறைவனிடம் பரிந்துரை வேண்டுதல் செய்தனர். மறுநாள் 27ஆம் திகதி காலை யாருமே எளிதில் நம்பமுடியாத நிலையில் அவரது நோய் சடுதியாகச் சுகமடைந்திருந்ததை அவதானித்தனர். அன்று மாலை உயிர்வாழ்வுத்திறன் கொண்ட நிலையில் பருவ நிலை அடையா குழந்தையின் கால் முதலில் வெளிவந்தது. பின்னர் குழந்தை சுகமாகப் பிறந்தது. அதேவேளை தாயாரும் நலமாக இருந்தார். அக்குழந்தைக்கு கொஸ்மே டி கொஸ்தா (Cosme De Costa) எனப் பெயரிட்டனர். அக்குழந்தை வளர்ந்து பின்னாளில் ஒரு குருவானவராகப் பணி செய்தது.

## முத்திப்பேறு பட்டத்திற்கான கோரிக்கை

சில நூற்றாண்டுகளின் பின்னர் ஜோசவ்வாஸ் அடிகள் பற்றிய ஆர்வம் திருச்சபையிடம் மீண்டும் ஆரம்பித்தது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயர்கள் 1954இல் யோசவ்வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்குமாறு கோரி மடல் ஒன்றைத் தயாரித்து அதில் கையொப்பமிட்டு அப்போதய திருத்தந்தை 12ஆம் பத்திநாதருக்கு அனுப்பிவைத்தனர். தொடர்ந்து இலங்கையின் கருதினால் பெஞ்சமின் குரே ஆண்டகை 1976இல் மற்றொரு மடல் மூலம் யோசவ்வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்குமாறு திருத்தந்தை ஆறாம் சின்னப்பரிடம் கோரியிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் புதுமை அங்கீகரிக்கப்படல்

முன்னர் கூறப்பட்ட சம்பவமானது 1991.10.18இல் ஒழுங்குமுறையான விசாரணையின் பின்னர் கோவா மறைமாவட்ட நடுவர்களினால் (Diocessan Curia of Goa) புதுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1992.10.28இல் மருத்துவத்துறை சார்ந்த குழுவினர் இதனை விஞ்ஞான ரீதியாக விளங்கிக்கொள்ள முடியாத புதுமை என இவ்வாறு சான்றிதழ் வழங்கினர். "Rapid and perfect cessation of haemorrhage, followed by delivery by the child's leg. This event cannot be explained by our science". 1993.12.19 அன்று இது தொடர்பாக திருச்சபை அதிகாரிகள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். பின்னர் 1993.05.04 திகதி கர்தினால், ஆயர்கள் ஆகியோர் ஒன்றுகூடிய வேளையில் கர்தினால் டி சைமன் லூர்து சாமி அவர்களுடன் இணைந்து இப்புதுமையானது கடவுளுடைய அருளால் நடைபெற்ற புதுமை என உறுதிப்படுத்தி திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இப்புதுமையானது யோசவ்வாஸ் அடிகளார் மூலம் இறைவனிடம் மன்றாடியதால் நிகழ்ந்தது எனவும், இது ஒருவரைப் புனிதராக்குவதற்கான தேவையைப் பூர்த்திசெய்துள்ளதெனவும் உரோமையிலுள்ள புனிதர்களுக்கான திருநிலைக்குழுவினரும் அங்கீகரித்திருந்தனர்.

அதேவேளை இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு மற்றொரு மனுவையும் 1993இல் சமர்ப்பித்திருந்தனர். அதனை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை இச்சம்பவமானது புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான காரணங்களை நிறைவுசெய்துள்ளதுடன் இது முதலாம்தரப் புதுமை எனவும் உறுதிப்படுத்தினார்.

## முத்திப்பேறு பட்டம் அளிக்கப்படல்

1995ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அவர்கள் கொழும்பு காலிமுகத்திடலில் ஜனவரி 21ஆம் திகதி இடம்பெற்ற திருப்பலியின்போது யோசவ்வாஸ் அடிகளாரை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார். Beatification என்ற ஆங்கில வார்த்தைக்கு 'முத்திப்பேறு பெற்றவர்', 'ஆசாரத்துக்குரியவர்', 'அருளாளர்' போன்ற வார்த்தைகளும் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன. முத்திப்பேறு பட்டம் என்பது புனிதர் பட்டத்திற்கு முன்னர் வழங்கப்படும் பட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனிதராக அறிவிக்கப்படல்**

2013 ஒக்ரோபரில் மீண்டும் யோசவ்வாஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான விசாரணைகளை ஆரம்பித்தனர். வழக்கமாகப் புனிதர் பட்டம் வழங்குவதற்கான நிபந்தனைகளுள் ஒன்று யாருக்கு அப்பட்டம் வழங்கப்படுகின்றதோ அவரை நோக்கி வேண்டுதல் செய்ததன் பயனாக குறைந்தது இரு புதுமைகள் நிகழ்ந்திருக்க வேண்டும். அப்புதுமைகள் உண்மையாகவே இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டு கடவுளின் அருளால் நிகழ்ந்தவை என்று திருச்சபை அதிகாரிகளாலும், விஞ்ஞானிகளாலும் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

யோசவ்வாஸ் அடிகளார் பெயரால் முதலாவது புதுமை நிகழ்ந்து அது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இரண்டாவது புதுமைக்காக காத்திருக்கும் நிலையில்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகைக்கான திகதி குறிக்கப்பட்டிருந்தது. திருத்தந்தையினுடைய இலங்கை விஜயத்தின்போது யோசவ்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் அளிக்க வேண்டும் என்று இலங்கை கத்தோலிக்க மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். அதற்கான கோரிக்கையையும் திருத்தந்தையிடம் முன்வைத்தனர். இலங்கை கத்தோலிக்க மக்களினதும் திருச்சபைத் தலைவர்களினதும் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை அவர்கள் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டாவது புதுமை நிகழாத நிலையிலேயே யோசவ்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் அளிக்க அங்கீகாரம் வழங்கினார். இச்செய்தி இலங்கை கத்தோலிக்கருக்கும், இந்தியக் கத்தோலிக்கருக்கும் ஏன் அனைத்து இலங்கைவாழ் மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது.

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலில் ஒப்புக்கொடுக்கப்பட்ட சிறப்புத் திருப்பலியின்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் யோசவ்வாஸ் அடிகளாரை புனிதராக அறிவித்தார். அங்கு கூடியிருந்த மக்கள் மிகுந்த கரகோசம் செய்து பெரும் மகிழ்ச்சியுடன் இந்த அறிவிப்பை வரவேற்றனர்.

சிதைந்துகிடந்த இலங்கைத் திருச்சபைக்கு உருக்கொடுத்த உத்தமராகிய யோசவ்வாஸ் அடிகளாரின் அயராத தூய பணிக்கு இறைவன் தகுந்த வெகுமதி அளித்தார். திருப்பீடங்களில் வைத்து வணங்கப்பெறும் பெரும் பாக்கியத்தை அடிகளார் பெற்றுக்கொண்டார். இலங்கை நாட்டின் முதல் புனிதர் என்ற பெருமையையும் அவர் தனதாக்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்சேர்க்கை - 1

### ஒரே பார்வையில் அடிகளாரின் வாழ்வும் பணியும்

| | |
|---|---|
| பெற்றோர் பெயர் | : கிறிஸ்ரோப்பர் வாஸ், மரிய டி மிராண்டா |
| பிறந்த திகதி | : 1651.04.21 |
| ஆறு குழந்தைகளில் மூன்றாவது குழந்தை | : யோசவ்வாஸ் |
| பிறந்த இடம் | : கோவாவிலுள்ள "பெனாலிம்" |
| ஆரம்பக் கல்வி | : சங்கோலே (Sancole) |
| இலக்கணக் கல்வி | : இயேசு சபையினரின் "புனித பவுல் கல்லூரி" |
| மெய்யியல், இறையியல் | : டொமினிக்கன் சபையினரின் "புனித தோமஸ் அக்குவைனஸ் உயர் கல்விக்கூடம். |
| 1671இல் | : (20வது வயதில்) குருத்துவ வாழ்வுக்கும், இறைபணிக்கும் தம்மை அர்ப்பணித்து குருத்துவத்திற்கு முன் வழங்கும் பட்டங்களைப் பெற்றார். |
| 23வது வயதில் | : உப தொண்டர் பதவி |
| 24வது வயதில் | : தொண்டர் பதவி |
| 1676இல் | : மேற்றிராசனக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். |
| 1681 – 1684 | : கன்னடத்தில் பணி |
| 25.09.1685 | : பெயரிடப்படாத சுதேச குருக்கள் குழுவில் இணைந்து குறுகிய காலத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்று புனித பிலிப்பு நேரியாரின் ஓரற்றோறி சபையை நிறுவினார். (Oratory of St. Philip Neri) |
| 1686 மார்ச் | : கோவாவைவிட்டு இலங்கைக்கான பயணம் ஆரம்பம். |
| 1687 மார்ச் | : தூத்துக்குடி வருகை |
| 1687 ஏப்ரல் | : மாறுவேடத்தில் மன்னார் கரையை அடைந்தார். |
| 1687 மே | : யாழ்நகர் சென்றடைந்தார். |
| 1687 ஜுலை | : சில்லாலை வருகை (இரு வருடங்கள் பணி) |
| 1690 ஜனவரி | : புத்தளம் வருகை (இரு வருடங்கள் பணி) |
| 1692 ஆகஸ்ட் | : கண்டி வருகையும், சிறையிலடைக்கப்பட்டதும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1692 டிசம்பர் | : கண்டி சிறைச்சாலை வளவினுள் நத்தார் நள்ளிரவுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். |
| 1694/1695 | : கிழக்கு கரையோரப்பகுதிக்கான முதலாவது விஜயம் (மூதூர் - கொட்டியார், மட்டக்களப்பு – தாண்டவன்வெளி, சம்மாந்துறை,சொறிக்கல்முனை) |
| 1696 இறுதிப்பகுதி அரசனின் | : வரட்சியால் பாதிக்கப்பட்டவேளை கண்டி வேண்டுகோளை ஏற்று மழை பொழியச்செய்தார். |
| 1696.02.10 | : குரு முதல்வராக நியமனம் |
| 1696 இறுதிப்பகுதி | : ஜோஸ் தே மெனெசஸ், ஜோசப் கர்வாலு இரு குருக்கள் புத்தளம் வருகை. |
| 1697-1698 | : கண்டி நகரில் வைசூரி |
| 1699 ஏப்ரல் | : ஆலயம் இடிக்கப்பட்டது. |
| 1699.09.08 | : கண்டியில் தேவ அன்னையின் பிறந்த நாளில் புதிய ஆலயம் திறந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். |
| 1702.07.22 | : கர்வாலு அடிகளார் மறைவு |
| 1705.08.31 | : ஓரற்றேறியன் குருக்கள் நால்வர் வருகை (தலைமன்னார்) |
| 1705.09.09 | : பணிக்காக நாடு எட்டாகப் பிரிக்கப்படல் |
| 1705 ஆவணி | : கிழக்குப் பகுதிக்கான இரண்டாவது விஜயம். |
| 1706.03.25 | : மெல்லோ அடிகளாரின் மரணம். |
| 1706.11.26 | : திருத்தந்தை 11ஆம் கிளமன்ட் அவர்களால் ஓரற்றேறியன் சபை அங்கீகரிக்கப்பட்டது. |
| 1707.06.04 | : விமலதர்மசூர்ய அரசனின் மரணம். |
| 1708 | : இக்னேசியஸ் அல்மெய்டா, பிரசீலியோ பறேற்றா ஆகிய இரு குருக்கள் வருகை. |
| 1711.01.07 | : குரு முதல்வர் பதவி, ஓரற்றேறியன் சபை குருக்களின் முதல்வர் பொறுப்புக்களை ஜோஸ்தே மெனசஸ் அடிகளாரிடம் ஒப்படைத்தார். |
| 1711.01.16 வெள்ளி | : இறையடி சேர்தல் |
| 1995.01.21 | : அருளாளர் பட்டம் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் வழங்கப்பட்டது. |
| 2015.01.14 | : புனிதர் பட்டம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வழங்கப்பட்டது. |

(நன்றி - "இலங்கையின் முதல் புனிதர் தூய ஜோசப்வாஸ்" தொகுப்பு:
ஜே.எச்.இரத்தினராஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**யோசவ்வாஸ் அடிகளார் பணியாற்றிய சில முக்கிய இடங்கள்**

(நன்றி – "இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப் வாஸ் வாழ்வும் பணியும்" எஸ். ஜி. பெரேரா யே. ச. - பதிப்பாசிரியர்: ஞானமுத்து பிலேந்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோசேவ்வாஸ் ஆண்டிற்கான செபம்

வல்லமைமிக்க, இரக்கத்தின் தந்தையே இறைவா!

எமது தாய்நாட்டின் அப்போஸ்தலராக புனித யோசேவ்வாஸ் அடிகளாரை எமக்குத் தந்தமைக்காக, எமது சிரம் தாழ்த்தி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

எமது மூதாதையர்களின் விசுவாச வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட வேளையில், புனித யோசவ்வாஸ் அடிகளாரின் எளிமை நிறைந்த தூய்மையான வாழ்வினாலும் அவருக்குள் பற்றி எரிந்த ஆன்மீக வாஞ்சையுடன் கூடிய மறைபரப்பு ஆர்வத்தினாலும் எமது மூதாதையர்களின் விசுவாச வாழ்வு ஆழப்படுத்தப்பட நீர் சித்தம் கொண்டீர்.

புனித யோசவ்வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டிலே, அவரது முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி, குருக்கள், துறவிகள், பொது நிலையினராகிய நாம், திருமுழுக்கினால் பெற்றுக்கொண்ட ஆழமான விசுவாசத்துடன் கூடிய தியாக வாழ்வை, தூய உள்ளத்துடன் வாழவும் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றவும் விசுவாசம் குன்றி தத்தளித்து வாழ்வில் அர்த்தத்தைத் தேடும் எமது கத்தோலிக்க குடும்பங்கள், நசரேத்து திருக்குடும்பத்தைப்போல புரிந்துணர்வுடன் வாழவும் உமது அருளைப் பொழிந்தருளும்.

விசுவாச வாழ்வில் நாம் முன்னெடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் உம்மால் புனிதப்படுத்தப்படவும் எமது இலங்கைத் திருநாட்டின் திருச்சபையில், நாம் அனைவரும் பங்குபற்றும், செயலாற்றும் மறைபரப்பாளர்களாகத் திகழவும் எம் ஒவ்வொருவரையும் நீர் வழி நடத்தியருளும்.

இவை யாவற்றையும் உம் திருமகன் கிறிஸ்து வழியாக உம்மிடம் இரந்து வேண்டுகின்றோம். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

ஞானமுத்து பிலேந்திரன் (பதிப்.)., இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசவ்வாஸ் வாழ்வும் பணியும் (தமிழாக்கம்), ஆயர் இல்லம், யாழ்ப்பாணம், 2014

தியோகுப்பிள்ளை, யாழ் ஆயர், வ., இலங்கைத் திருச்சபையைக் காத்த மாவீரன், யாழ்ப்பாணம், 1990.

சேலஸ்கி, பேராயர், எல். எம்., இலங்கை அப்போஸ்தலர் முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ், தியான சம்பிரதாய சபைக் குரு 1651 – 1711 (தமிழாக்கம்), யாழ்ப்பாணம், 1991

இரத்தினராஜா, ஜே. எச் (தொகு)., இலங்கையின் முதல் புனிதர் தூய யோசவ்வாஸ், தூய காணிக்கை அன்னை ஆலயம், தாண்வன்வெளி, மட்டக்களப்பு, 2017.

பாவிலுப்பிள்ளை அமதி), ம., யோசவ்வாஸ் முனிவரின் சரிதை, புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், 1980.

ஜெயசீலன், ஜே. ஈ., யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு, வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், 1997.

Romualdo Robin Rodrigues., **2017 Stories of Saint Joseph Vaz,** (2nd Edition) Goa, 2015.

Perera sj, S.J., **Life of blessed Joseph Vaz, Apotlole of Sri Lanka.,** 3rd Edition, Humanics Universal Inc, Canada.

Zaleski, Archbishop, L, M., **The Apostle of Ceylon**, Culcutta, 1897.

கட்டுரை

யோண்சன் ராஜ்குமர், யோ., "யோசவ்வாஸ் முனிவரின் வாழ்க்கைச் சுவடுகள்", இறையியல் கோலங்கள், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம், 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரின் படைப்பு முயற்சிகள்

## எழுதிய நூல்கள்

1. தண்ணீருக்குள் தாகமா?
   (இறைவனின் இயல்புகள்) - 2007

2. வெளிச்சத்தின் வேர்கள்
   (செபம் பற்றிய புரிதல்கள்) - 2007 (2007ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த சமய நூலுக்கான விருது பெற்றது)

3. நெருடல்கள் (கவிதைத் தொகுதி) 2009

4. கல்வாரிக் காலடிகள்
   (திருவிவிலியச் சிலுவைப் பாதை) 2012

5. சிலுவையின் பாதையில் சின்னக் காலடிகள்
   (சிறுவர் சிலுவைப் பாதை) 2013

6. அன்பின் அதிர்வுகள்
   (சிலுவைப் பாதை) – 213

7. உறவின் உரசல்கள்
   (குடும்பம் பற்றிய விவிலிய சமூக உளவியல் பார்வை) 2014

## பதிப்பித்த நூல்கள்

1. மன்னல் - மன்னார் நகர பிரதேச இலக்கிய விழா மலர் - 2007
2. அருள்தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளின் குருத்துவ அருட்பொழிவின் பொன்விழா மலர் 2007
3. முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா மலர்- 2008

## வெளியிட்ட பாடல் இறுவட்டுக்கள்

1. குடும்பக் குவலயம் - 2014
2. இரக்கத்தின் இராகங்கள் - 2016
3. கிறிஸ்மஸ் இராகங்கள் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூல் பற்றி



இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை 2017ஆம் ஆண்டை 'புனித யோசவ்வாஸ் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் மிகவும் உன்னதமானது, ஆச்சரியமானது. இன்றைய திருச்சபை பின்பற்ற வேண்டிய பல செய்திகளைக் கொண்டது.

எல்லா மக்களும் வாங்கி வாசிக்கும் வகையில் சிறிய நூலாகவும், குறைந்த விலையிலும் யோசவ்வாஸ் அடிகள் பற்றி இந்நூல் வெளிவருவது பாராட்டத்தக்கது. இந்நூலை அனைவரும் வாங்கி வாசிக்கும் படியாகவும், பங்குத்தந்தையர், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலைத் தலைவர்கள் இந்நூலைத் தங்களுடைய பங்கு மற்றும் பணித்தளங்களில் பெற்று, மக்கள் வாங்கி வாசித்துப் பயனடைய ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**
**திருத்தூது நிர்வாகி, மன்னார் மறைமாவட்டம்.**



மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' புனித யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதில் யோசவ்வாஸ் அடிகளாரைப் பற்றிய இந்நூலாக்க முயற்சியும் ஒன்றாகும்.

இந்நூல் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாறு முழுவதையும் சுருக்கமாகத் தருகின்றது. எளிய தமிழ் நடையில் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது. யோசவ்வாஸ் அடிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டில் இந்நூலை அனைவரும் வாங்கி வாசித்துப் பயனடைய வேண்டுமென்று கேட்டுநிற்கின்றேன். நூலாசிரியர் நேசன் அடிகளாருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

**அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார்**
**குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம்**

ISBN 978 - 955-7351 - 00-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கை அச்சகம், மன்னார்.